இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 144 | இதழ் : 18 | திகதி : 22.11.2020 | விலை : 30.00


## புதுப்பொலிவுடன் புனித மடுத்தீனார் குருமடம்






புனரமைப்பு செய்யப்பட்டுப் புதுப் பொலிவுடன் விளங்கும் புனித மடுத்தீனார் சிறிய குருமட சிற்றாலயம் யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களினால், 15.11.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டு புனித மடுத்தீனார் திருநாள் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

புனித மடுத்தினார் குருமடம் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது குருமடம் ஆகும். இது 150 ஆண்டுகளைக் கடந்து இன்றும் யாழ் மறைமாவட்ட அருட்பணியாளர்களை உருவாக்கும் சிறிய குருமடமாகத் திகழ்ந்து வருகின்றது. 151வது ஆண்டுக்குள் காலடி பதிக்கும் இக்குருமடம் யாழ் மறைமாவட்ட ஆயரின் வழிநடத்தலில் தற்போதைய குருமட அதிபர் அருட்திரு S.J.C. பாஸ்கரன் அடிகளின் முயற்சியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு அழகிய தோற்றத்துடன் காட்சியளிக்கின்றது.

## ஐம்பொன்னாய் ஒளிரும் பேரருட்திருவே

யாழ் மறைமாவட்ட திருஅவைக் கோபுரத்தில்
ஈராயிரத்துப் பதினைந்தில் ஏற்றிய பேரொளி
ஐந்தாண்டு நிறைவில் பிரகாசிப்பதை
நிமிர்ந்து பார்!
அதோ! ஞானப்பிரகாசமாய் ஒளிர்கிறது காண்!
நம் ஆயர் ஆண்டகை
“மரியன்னை வழி இயேசுவிடம்”
வாக்கில் வன்மை
எண்ணியதை எண்ணியாங்கு
எய்தும் திண்மை
பக்தியின் சக்தியாகி
உரமூட்டும் வாண்மை
இறையருள் பொழிவில் நலம் பல கண்டு
மறைஞான பணி தொடர
மந்தைகளின் வாழ்த்தொலிகள்
ஆலயமணி ஓசையென ஒலிக்கட்டும்

- பாதுகாவலன் குடும்பம்



யாழ். ஆயரின் ஆயர் அருட்பொழிவு தினம்
28.11.2020

## பொன் விழாக்காணும் அருட்பணி பேணாட் அடிகளார்



யாழ். மறைமாவட்டத்தின் மூத்த குருவாகிய அருட்பணி A.I. பேணாட் அடிகளார் தமது குருத்துவப் பொன் விழாவைக் கடந்த ஒக்ரோபர் 19ம் திகதி கனடாவில் நினைவு கூர்ந்தார்.

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் ஆறாவது சுதேச அதிபராகப் பணிப்பொறுப்பேற்று பத்திரிசியார் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றினார்.

யாழ். மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவின் தலைவராகவும் போர்க்காலங்களில் பணியாற்றி ஒடுக்கப்பட்டவர்களின் குரலாகச் செயற்பட்டவர். பொன் விழாக்காணும் அருட்தந்தை பேணாட் அடிகளாரைப் பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றோம்.

# இன்றைய துயரங்களுக்குக் காரணம் நம் சுயநலப்போக்குகளே



பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்

அனைத்து மதங்களின் அங்கத்தினர்களும், தங்களின் சுயநலன்களைக் கைவிட்டு, தங்கள் மதங்களின் படிப்பினைகளுக்கு இயைந்தவகையில் வாழ்வை நடத்திச் செல்லவில்லையெனில், உலகம் அழிந்து போகும் காலம் வெகுதொலைவில் இல்லை என எச்சரிக்கை விடுத்துள்ளார் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை.

மக்களைப் பெருமெண்ணிக்கையில் கொலை செய்யும் நோக்கத்தில் நுண்ணுயிர் உயிர்க்கொல்லி ஆயுதங்களைப் பல சக்திவாய்ந்த நிறுவனங்கள் ஆய்வு செய்து தயாரித்து வருகின்றன எனவும், அதே ஆய்வு நிறுவனங்கள், அதற்கான மருந்துகளைத் தயாரித்து இலாபம் சம்பாதித்து வருகின்றன எனவும், கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, கவலையுடன் தெரிவித்தார். கொவிட்-19 நோய்க்கிருமிகள் யாரால் இவ்வுலகிற்கு வந்தன?, இந்நோய்க்கான புதிய மருந்து கண்டுபிடிப்புக்கள் உண்மையில் பலன் தருமா? போன்ற சந்தேகக் கேள்விகள் ஒவ்வொருவர் மனதிலும் எழுகின்ற போதிலும், இன்றைய துயர நிலைகளுக்குக் காரணம் மனிதரின் சுயநலப் போக்குகளே என்பது மட்டும் சந்தேகமின்றித் தெளிவாக உள்ளது எனத் தெரிவித்தார் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை.

சுயநலப்போக்குகளால் மாசடைந்துள்ள இப்பூமியில், அனைத்து மத நம்பிக்கையாளர்களும், தங்கள் மதப் படிப்பினைகளுக்கு இயைந்த வகையில் வாழ்வை நடத்தி, தன்னலமறுப்புக் கொள்கையைப் பின்பற்றவேண்டும் என்ற அழைப்பை முன்வைத்தார், பேராயர். கர்தினால் ரஞ்சித். முதலாளித்து வக் கொள்கைகளைப் பின்பற்றும் நாடுகளில், இன்று, மதங்கள் முற்றிலுமாக மறக்கப்பட்டு, ஆன்மீகம் ஒதுக்கப்பட்டு வருவதாக, கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, தன் கவலையை வெளியிட்டார்.

## பல்கலைப் பேரவைக்குப் புதிய உறுப்பினர் நியமனம்



யாழ். பல்கலைக்கழகத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பீடங்களின் பீடாதிபதிகள் எண்ணிக்கைக்கேற்ப பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஈடு செய்யும் வகையில் யாழ். பல்கலைக்கழகக் கிறிஸ்தவ நாகரிகத் துறையின் முன்னாள் தலைவரும், வாழ் நாள் பேராசிரியருமான அருட்பணி ஞானமுத்து பிலேந்திரன் அடிகள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக் கழகச் சட்டத்துக்கு அமைவாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ☞ 02

## மானிப்பாய் திருக்குடும்பப் பொது நிலையினரின் வழிகாட்டலில் இளையோருக்கான கருத்தரங்கு

மானிப்பாய் திருக்குடும்பப் பொது நிலையினரின் ஏற்பாட்டில் மானிப்பாய் பங்கிலுள்ள க.பொ.த சாதாரண, உயர்தர மாணவரையும், இளையோரையும் உள்ளடக்கியதாக 2020-09-25 அன்று மானிப்பாய் புனித அன்னாள் ஆலய மண்டபத்தில் "பசுமையான மறைமாவட்டத்தை நோக்கி என்னும் தலைப்பில் விளிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. இந்நிகழ்விற்கு வளவாளராக யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி P. J. ஜெபரட்ணம் அடிகளார் கலந்து கொண்டு அர்த்தமுள்ள, ஆழமான தற்காலத்திற்கு மிகவும் தேவையானதுமான கருத்துப் பகிர்வை மேற்கொண்டிருந்தார். ☞ 02

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## சீன வர்த்தக ஒப்பந்தமும் ஈழத் தமிழர்கள் விவகாரமும்

அமெரிக்காவில் ஜோ பைடன் ஜனாதிபதியாக ஜனவரி மாதம் பதவியேற்கவுள்ள நிலையில், ஆசிய நாடுகளை உள்ளடக்கிய பிராந்தியப் பொருளாதார ஒத்துழைப்புக் கூட்டமைப்பு (Regional Comprehensive Economic Partnership) (RCEP) ஒப்பந்தத்தில் 15 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன.

உலகின் 39 சதவீத பொருளாதாரக் கட்டமைப்புகளை இந்த நாடுகள் உள்ளடக்கியுள்ளதால் இது உலகின் மிகப் பெரிய வர்த்தக ஒப்பந்தமாகக் கருதப்படுகின்றன. ஆசிய அமைப்பில் அங்கம் வகிக்கும் பத்து தென்கிழக்கு ஆசிய நாடுகளையும் தென் கொரியா, சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளையும் உள்ளடக்கியே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

உலகளாவிய மக்கள் தொகையில் ஏறத்தாள மூன்றில் ஒரு பகுதியையும் அதன் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 30 சதவீதத்தை இந்த ஒப்பந்தம் உள்ளடக்கியுள்ளது. ஆனால் இந்த ஒப்பந்தம் வர்த்தக ஊக்குவிப்பு என்ற போர்வையில், படிப்படியாக கட்டணங்களைக் குறைக்கும், இந்தோ- பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு வாதத்தை எதிர்த்து முதலீட்டை அதிகரிக்கும், மற்றும் பிராந்தியத்திற்குள் பொருட்களின் சுதந்திரமான இயக்கத்தை அனுமதிப்பது போன்ற செயற்பாடுகளே இந்த ஒப்பந்தத்தின் பிரதான நோக்கமென அவதானிகள் கூறுகின்றனர்.

இந்த ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திடவில்லை. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தாய்லாந்தில் நடைபெற்ற இந்த ஒப்பந்தம் தொடர்பான 28ஆவது கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதமர் நரேந்திரமோடி, இந்தியா தொடர்பாக முக்கியமான சில தீர்மானங்களை முன்வைத்திருந்தார்.

ஆனால் அது பரிசீலிக்கப்படவில்லையென இந்தியா குற்றம் சுமத்தியிருந்தது. ஒப்பந்தத்தின் பிரகாரம் குறைந்த கட்டணங்கள் உள்ளூர் உற்பத்தியாளர்களை பாதிக்கக்கூடும் என்ற அச்சத்தின் காரணமாகவே இந்தியா வெளியேறியிருக்க வேண்டும். ஆனால் இந்திய முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பு வெளியிட்டதன் காரணமாகவே, ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாமல் வெளியேறியதாக இந்திய உள்துறை அமைச்சு காரணம் கற்பிக்கின்றது.

இதேவேளை, 15 நாடுகளுக்கிடையிலான ஆசிய- பசுபிக் வர்த்தக ஒப்பந்தம் சீனாவோடு உறவை வலுப்படுத்த உதவும் என அவுஸ்ரேலியாவின் வர்த்தக அமைச்சர் சைமன் பர்மிங்கம் தெரிவித்துள்ளார். ஆனால் இந்தோ- பசுபிக் பிராந்தியப் பாதுகாப்புக்காக அவுஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து குவாட் எனப்படும் கூட்டுக் கடற்படைப் பயிற்சியில், ஈடுபட்டு வருகின்றன. அதில் இலங்கையை இணைப்பதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் இந்தோ- பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில். இலங்கையின் கொழும்புத் துறைமுகக் கிழக்கு முனையக் கொள்கலன் இறங்குதுறையை அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றிலும் இந்தியா. ஜப்பான், ஆகிய நாடுகள் இலங்கையுடன் இணைந்து கைச்சாத்திட்டுள்ளன. இவ்வாறனதொரு நிலையில். அவுஸ்திரேலியா. ஜப்பான் ஆகிய நாடுகள் சீனாவுடன் இணைந்து குறித்த வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

ஆகவே இந்தோ- பசுபிக் பாதுகாப்பு விடயங்களில் இந்த நாடுகள் தம்முடன் நிற்க வேண்டுமெனவும் பொருளாதார ரீதியாக சீனாவுடன் உறவைப் பேணலாம் என்ற நோக்கிலும் அமெரிக்கா செயற்படுகின்றதா என்ற கேள்விகள் எழுகின்றன. அல்லது அமெரிக்காவின் ஆலோசனையுடன் அவுஸ்திரேலியா. ஜப்பான் ஆகிய நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதா என்ற சந்தேகங்களும் இல்லாமலில்லை. ஆனாலும் இந்த அணுகுமுறை என்பது, இன அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நாடுகளுக்கு வாய்ப்பாகவே இருக்குமென அவதானிகள் கூறுகின்றனர்.

ஏனெனில் ரோகின்யா முஸ்லிம்களை இன அழிப்புச் செய்து வரும் மியன்மார் அரசும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருக்கிறது. இந்தியா இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகியிருந்தாலும், மியன்மார் அரசுடன் நரேந்திரமோடி அரசு உறவைப் பேணி வருகின்றது. நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றையும் இந்தியா மியன்மாருக்கு வழங்கியுள்ளது. ஆகவே இவ்வாறான அணுகுமுறைகள் அரசியல் விடுதலை வேண்டி நிற்கும் ஈழத்தமிழர்களுக்கு அச்சமானதொரு நிலையை உருவாக்கியிருக்கிறது.

ஒருபுறத்தில் அமெரிக்காவோடு நட்பாக இருக்கும் நாடுகள் சீனாவுடன் மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட, மறுபுறத்தில் இந்தோ- பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்க நலன்சார்ந்து நிற்கும் இந்தியா, இனப்படுகொலையில் ஈடுபட்ட மியன்மார் அரசுடன் உறவைப் பேணி வருகின்றது.

சீனாவைப் பிரதானப்படுத்திய RCEP எனப்படும் பிராந்தியப் பொருளாதார ஒத்துழைப்புக்கூட்டமைப்பில் இலங்கை இல்லாவிட்டாலும், இந்த நகர்வுகள் இலங்கைக்கு அதிஸ்டமாகவே உள்ளன. குறிப்பாக சீனாவுடன் ஏற்கனவே செய்து கொண்ட பொருளாதார ரீதியான ஒப்பந்தங்கள், அபிவிருத்தித் திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொண்டு, இந்தோ- பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களில் மாத்திரம் அமெரிக்க. இந்திய அரசுகளுடன் நின்றுவிடலாம் என்ற மகிழ்ச்சியானதொரு செய்தி இலங் கைக்குக் கிடைத்திருக்கின்றது.

இந்த நற்செய்தி என்பது ஈழத்தமிழ் மக்களுக்கு எப்போதும் ஆபத்தானதொன்றாகவே அமையுமென அவதானிகள் கூறுகின்றனர். இலங்கையைப் பொறுத்தவரை இந்தோ- பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்க, இந்திய அரசுகளுக்கான பாதுகாப்பு விடயத்தில் ஒத்துழைப்பு வழங்குவதன் ஊடாக, ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக் கோரிக்கையை அடக்கிவிடலாமெனக் கருதுகின்றது.


அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இலங்கையின் இந்த அணுகுமுறை புரியாததல்ல. ஆனால் தமது நலன்சார் விவகாரங்களுக்காக இலங்கை விட்டுக் கொடுக்கும் நிலையில். ஈழத்தமிழர்கள் நிலைமை தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டியதொரு தேவையில்லை என்றே அமெரிக்காவும் இந்தியாவும் கருதுகின்றது.

RCEP எனப்படும் பிராந்தியப் பொருளாதார ஒத்துழைப்புக் கூட்டமைப்பு ஒப்பந்தத்தில் இந்தியா எந்தநேரத்திலும் இணையக்கூடிய ஏற்பாடுகள் உண்டு. ஏனெனில் இந்த ஒப்பந்தம் தொடர்பாக 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2019ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற 28 மாநாடுகளிலும் இந்தியா பங்குபற்றியிருந்தது. இறுதியாக வியட்நாமில் நடைபெற்ற 29ஆவது மாநாட்டில் மாத்திரமே இந்தியா பங்குகொள்ளாது விலகியது. அதனால் இந்த ஒப்பந்தத்தில் இணைவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நாடுகளின் நகர்வுகளுக்கு இலங்கை வழங்கும் ஒத்துழைப்புகள், ஈழத்தமிழர்களின் கருத்துக்கள் பெறப்படாமல் இந்தியாவின் ஆலோசனையோடு அமெரிக்காவினால் ஜெனீவா மனித உரிமைச்சபையில் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானங்களைக்கூட ரத்துச் செய்யும் ஆபத்துகளும் உண்டு.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

## ஆயர் பணிக்கள அகவையில் ஐந்து ஆண்டுகள் அரும் சேவை



2015 இல் நல்ல ஆயனின் தடம் பதித்தே
இன்னரும் சேவை
யாழ் மறை மண்ணிலாற்ற
இனிதே அர்ப்பணித்தீர்
மரியன்னை துணையுடன்
இன்னல்கள் பல கடந்தே
ஐந்தாண்டுகள் அயராது
இன்னலுறும் மக்களின்
பணிக்காய் உழைத்தீர்
இதயம் நிறைந்தே வாழ்த்துகின்றோம்!

என்னைப் பற்றுபவன்
தன் சிலுவை தூக்கட்டும்
தன்னலப் பற்றகற்றியே
என் சுவடு தொடரட்டும்
விண்ணவன் இயேசு வார்த்தை
அன்றே ஏற்றீர்
கண்ணெனக் கருதினீர்
மந்தைகளின் பொன்னான வாழ்வை
மண்ணிலே புறப்பட்டீர்
மனிதத்தை வாழ்விக்க
பொன்னான நாளில் பணிந்தே
வாழ்த்துகின்றோம்!

ஆன்மீகத் தளர்வு அரசியல் அழுத்தம்
அநாகரீக வாழ்வு, அநீத குண்டுத்தாக்குதல்
அகதிகளாய் அலைவோர்,
ஆலயமற்று அங்கலாய்ப்போர்
அனைத்திலும் அஞ்சாது
ஆடுகளைத் தேற்றியே
அன்போடு அரவணைக்கும்
ஆயனாய் ஆற்றிய
அறப்பணிகளை நினைந்தே
வாழ்த்துகின்றோம்

உரிமை இழந்தோரின்
உரிமைக் குரலானீர்
உதவி இழந்தோரின்
உறுதிக்கரமானீர்
உலகை உலுப்பும்
கொரோனாவிலும் விரைந்தே
உறுதியுள்ள விசுவாசம் காத்தீர்
மந்தைகளிடம்
உண்மை இறைவன் பணியில்
உயர்ந்தே விளங்கி
உன்னத சேவை
பல்லாண்டுகளாற்ற
வாழ்த்துகின்றோம்!

S.M.**வுளோறன்ஸ்**
இளவலை

### பல்கலை ப் பேரவைக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நியமனம் தொடர்பான அறிவித்தல் நேற்று முன்தினம் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வாழ்நாள் பேராசிரியர் அருட்பணி ஞானமுத்து பிலேந்திரன் யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறையில் மிக நீண்டகாலமாகப் பணியாற்றி வருகின்றார். அவர் கத்தோலிக்க குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு புனித பத்திரிசியார் கல்லூரியில் மத்திய பிரிவுக்கும், பத்திரிசியார் கல்லூரி விடுதிக்கும் பொறுப்பாக இருந்த காலத்தில் இந்து நாகரிகத்தை ஒரு பாடமாகக் கற்று க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியைப் பெற்றிருந்தவர் என்பதுடன், யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் பதில் பீடாதிபதியாக இவர் பணியாற்றிய காலத்திலேயே இந்து கற்கைகள் பீடத்துக்கான முன்மொழிவு இவரால் கையொப்பமிடப்பட்டு முன்மொழியப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### மானிப்பாய் திருக்குடும்ப ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கருத்தரங்கில் யாழ் மறை மாவட்டச் சூழலைப் பசுமையாக்குவதற்கு மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகளாக மரங்களை நாட்டுதல், வீட்டுத்தோட்டம் செய்தல், பொலித்தீன் பாவனையைத் தவிர்த்தல், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தல் சுற்றுச்சூழல் பராமரிப்பு ஜீவ காருண்யத்துடன் படைப்புக்களைப் பேணுதல் போன்ற விடயங்களுடன் இச் செயற்பாடுகளில் இளையோரின் வகிபாகம் பற்றிய பல முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இதில் முக்கியமாக சுற்றுச்சூழல் தொடர்பான இறைவார்த்தைகளும் அவற்றிற்கான விளக்கங்களும் சமகால நிகழ்வுகளின் வர்ணப்படங்களுடன் கேட்போர் உள்ளத்தைத் தொடும் வகையில் சிறப்பாக இடம் பெற்றன.

இந்நிகழ்வில் மானிப்பாய் பங்குத் தந்தை அருட்பணி றெக்ஸ் சௌந்தரா அடிகளாரும் திருக்குடும்பசபை அருட் சகோதரி ஜசிந்தாமாறி அவர்களும், மானிப்பாய் திருக்குடும்பப் பொது நிலையினரும் கலந்து கொண்டு தமது பூரண ஒத்துழைப்பை நல்கியிருந்தனர் சூழல் நேயமிக்க சமுதாயத்தை எதிர்காலத்தில் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாய் இக்கருத்தரங்கு அமைந்திருந்தது.


விண்ணக வாழ்வின் 7ம் வருடம்

அன்னை மடியில் 17.01.1937



ஆண்டவன் அடியில் 05.12.2013


அமரர்
சந்தியோ அந்தோனிப்பிள்ளை
(எட்வேட்ஸ் J.P - இளைப்பாறிய NRTB
டிப்போ அத்தியட்சகர்)
“நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்
விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்
ஆண்டுகள் ஏழு ஆனாலும்
பிரிவின் வலி நீள்கிறது
ஆண்டவரில் மரித்தவர்கள்
அவரில் என்றும் வாழ்கிறார்கள்
இவரின் ஆன்மா நித்தியமும் இறைப்பாற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

பிரிவகலாத
குடும்பத்தினர்

AD80

# நான் கண்ட அதிபர்



யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் ஆறாவது சுதேச அதிபராகத் தடம் பதித்தவர் அருட்பணி A.I.பேணாட் அடிகளார் அவர்கள். 1992ம் ஆண்டிலிருந்து 2002ம் ஆண்டு வரை பத்திரிசியார் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றுக் கல்லூரியின் பல்துறை வளர்ச்சிக்குத் துணை போனவராக இவரை உய்த்துணர முடிகிறது. 1973ம் ஆண்டுகளில் நான் புனித பத்திரிசியார் கல்லூரியில் பயின்றபோது "நசரேத் விடுதிச்சாலை"யில் பேணாட் அடிகளாரின் கண்காணிப்பின் கீழ் வாழ்ந்தமை இன்றும் இனிக்கும் நினைவுகளாக நிழலாடுகின்றது. அப்போது அவர் கல்லூரியின் Prefect of Studies - Upper School பொறுப்பாளராகவும், விடுதிக் காப்பாளராகவும் பணியாற்றினார்.

**பல பணித்தளங்களின் பணியாளன்**

அருட்பணி A.I.பேணாட் அடிகளார் 19.10.1970 ஆம் ஆண்டு இந்தியாவிலுள்ள பூனேஎன்ற இடத்திலேயே குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அதன்பின்னர் 1971 - 1972 ஆம் ஆண்டு வரை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் உப அதிபராகக் கடமையாற்றினார். 1973 ஆம் ஆண்டு புனித பத்திரிசியார் கல்லூரியில் பணிபுரிந்தார். 1974 இல் அச்சுவேலிப் பங்கில் உதவிப் பங்குத்தந்தையாக சேவையாற்றினார். 1974 களிலும் 1982 ஆம் ஆண்டுகளிலும் அம்பிட்டிய தேசிய குருமடத்தின் விரிவுரையாளராகப் பணியேற்றார். மேற்படிப்புக்காக வெளிநாடு சென்று திரும்பிய அவர், மீண்டும் 1989 இல் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகவும், உப அதிபராகவும் செயலாற்றி 1992 இல் கல்லூரியின் அதிபர் பதவியை அலங்கரித்தார். பல பணிகளைப் பணிவுடனும் துணிவுடனும் மேற்கொண்டார்.

**ஆசிரியர்கள் நலனோம்பும் பண்பாளன்**

கல்லூரி ஆசிரியர்கள் மட்டில் கண்டிப்புடன் செயற்பட்டவர் என்பதனை மறுப்பதற்கில்லை. கடமை தவறும் ஆசிரியர்களுக்கு இவர் சிம்ம சொப்பனம். ஆனால் ஆசிரியர்களின் மனம் புண்படும் படியாகப் பேசியதில்லை. அவரது வாயிலிருந்து வெளிப்படும் வார்த்தைகள் நாகரீகத்தை வெளிக்காட்டும். கோபத்துடன் கொந்தளித்தாலும் வார்த்தைகள் கட்டுக் கோப்பானவை. வார்த்தைகள் வரம்பு மீறா. அதனாலேயே ஆசிரியர்கள் அவரை "Gentleman" எனக் கணித்தனர். எந்த ஒரு ஆசிரியரதும் உரிமைகள் மீறப்படுவதனை விரும்பமாட்டார். ஆபத்துவேளைகளிலும், கஸ்ட நேரத்திலும் கைகொடுத்து உதவும் மனம் கொண்டவர். "உதவி தேவைப்படும் சந்தர்ப்பத்தில் சாதி, சமயம், ஆண், பெண் என்று பாரபட்சம் காட்டாது உதவி செய்ய முன்வர வேண்டும். PATRICIAN என்ற உணர்வுடன் உதவிட வேண்டும். என்ற மனப்பாங்குடன் செயற்பட்டவர். எந்த நிலையிலும் பதட்டப்படாதவர். நிதானத்துடன் ஆசிரியர்களை எதிர்கொண்டு அவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வெற்றி கண்டவர்.

**பக்குவத்துடன், பக்கச் சார்பற்றுச் செயற்பட்டவர்.**

அனைவரையும் சமனாக நடாத்தும் நல்ல குணங் கொண்டவராக இவரை நான் அனுபவித்திருக்கிறேன். அவ்வாறான பல சந்தர்ப்பங்களை இங்கு கோடிட்டுக் காட்ட முடியும். பக்கச் சார்பாகச் செயற்படுதல் என்பது இவர் பக்கத்தில் இல்லை. கல்லூரியில் மாணவர்களுக்கு அனுமதி வழங்கும் சந்தர்ப்பங்களில் நேர்கொண்ட பார்வையுடன் செயற்பட்டவர். உயர் அதிகாரிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் அனுமதி வேண்டி இவரை அணுகியபோதெல்லாம் அவர்களுக்குத் தோல்வியே கிட்டியது. அனுமதிப் பரீட்சையில் சித்தி பெறுதல் கட்டாயம் என்பதை வலியுறுத்தினார். ஆசிரியர்கள் மட்டில் கூட பக்கம் சார்ந்து செயற்பட்டார் என்ற வரலாறு இல்லை. அனைவருக்கும் ஒரே நீதி, இவ்வாறான ஒருவரை இக்காலத்தில் காண்பதென்பது அரிது.

**எளிமைக்கோலம் பூண்டவர்**

உயர் பதவிகள் கிடைத்தவுடன் பகட்டான, ஆடம்பர வாழ்க்கையை வாழத் துடிப்பவர்கள் எமதுசமூகத்தில் பலர் உள்ளனர். இதுவே இன்றைய யதார்த்தம்.

அருட்பணி A.I பேணாட் அடிகளார் இதற்கு விதிவிலக்கானவர். எனது அனுபவத்தில் அவருக்கு வாகனமோட்டத் தெரியாது. துவிச்சக்கர வண்டியே அவரது உயர் ரக வாகனம். உப அதிபராக, அதிபராகக் கடமையாற்றியபோது ஆடம்பர வாகனங்களில் பவனி வரவில்லை. துவிச்சக்கர வண்டியில் பல மைல் தூரம் பயணம் செய்தார். யாழ்ப்பாணத்திலிருந்து தனது ஊரான தாளையடிக்கு துவிச்சக்கர வண்டியிலேயே சென்று வந்தார். மோட்டார் வாகனத்தை விட அவரது வாகனம் வேகமாகச் செல்லக் கூடியது என்பதனை நான் அறிவேன். ஏனைய விடயங்களிலும் அவர் எளிமையுடன் வாழ்ந்தார். இருப்பதை உண்டு குடித்து மகிழ்ந்து வாழ்ந்தார். அறுசுவை உணவையோ ஆடம்பர ஆடைகளையோ அவர் நாடியதில்லை. ஆண்டியின் வாழ்வு போன்றது அவரது வாழ்க்கை. பதவிகள் பல வந்தபோதும் அவரது வாழ்க்கைக் கோலம் மாறவில்லை.

**விளையாட்டு வீரன்**

இவர் குருமட மாணவனாக இருந்தபோது ரெனிஸ், செஸ் (Chess) போன்ற விளையாட்டுக்களில் தீவிர போக்குடையவராக விளங்கினார். அதனுடைய வளர்ச்சியே இவர் அதிபராகஇருந்த வேளைகளிலும் இவ் விளையாட்டுக்களில் ஆர்வம் காட்டினார். விளையாட்டு வீரனாக இருந்ததாலோ என்னவோ இறுதிவரை இவர் இளைஞனாக, இளமைத் தோற்றம் கொண்டவராகக் காட்சி தந்தார். தனது அனுபவங்களைத் தனது அதிபர் பணிக்காலத்தில் மாணவர்களுக்கு எடுத்துக்கூறி நல்ல விளையாட்டு வீரர்களை உருவாக்க முயன்றார். வெற்றி, தோல்வி இரண்டையும் சமமாக ஏற்றுக்கொள்ளுதல், பொறாமை, வஞ்சகம் என்பவற்றை அகற்றுதல் கடுமையான மனவெழுச்சிச் சந்தர்ப்பங்களை நிர்வகித்துக் கொள்ளுதல், கட்டுப்பாடு, கீழ்ப்படிவு, தலைமைத் துவத்தை மதித்து நடத்தல், நேரந் தவறாமை போன்ற பண்புகளை மாணவர் கடைப்பிடித்து கல்லூரியின் கௌரவம் பாதுகாக்கப்படும் வண்ணம் கருமமாற்ற வேண்டும் என்பதில் உறுதி கொண்டிருந்தார்.

ஆசிரியர் சி.ஸ்ரனிஸ்லாஸ்

**புதிய யுகத்தின் புதிய ஒளிக்கீற்றானவர்**

இவர் தனது எல்லா உத்தியோக ஒன்றுகூடல்களிலும், சந்திப்புக்களிலும் புதிய யுகம் பற்றிய சிந்தனைகளைப் பரிமாறிக் கொண்டிருப்பார். சில சமயங்களில் பாரம்பரிய பழைய கருத்துக்கள் சிலவற்றை வெறுத்தார். சில சமயங்களில் புரியாத புதிராக தென்பட்டார். ஆங்கிலப் புலமை பெற்றவராக கல்விப் புலத்தில் கணிக்கப்பட்டார். இவரை அதிபராகக் கண்டவர்கள் இவரது சட்டதிட்ட ஒழுங்கமைப்பைக் கண்டு கலங்கினர். இவரை ஒரு ஆங்கில ஆசிரியராக அனுபவித்தவர்கள் இவரது கற்பித்தல் திறமையைக் கண்டு திடுக்குற்றனர். இவரை இசைஞானியாகக் கண்டவர்கள் அதில் மூழ்கி இன்பம் சுவைத்தனர். நண்பராக இவரை அணுகியோர் நட்பின் இலக்கணத்தை அறிந்தனர். மொத்தத்தில் எல்லோருக்கும் எல்லாமாக புதிய சிந்தனையின் சிற்பியாகத் திகழ்ந்தார்.

**இடப்பெயர்வின்போது ஆறுதல் தந்த அன்பன்**

1995ம் ஆண்டு எமது பிரதேசத்தில் இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வை எவரும் மறந்துவிட முடியாது. எமது கல்லூரி ஆசிரியர்கள் பல இடங்களிலும் சிதறி வாழ்ந்தனர். கல்லூரி ஆசிரியர்கள் பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர் நோக்கிய காலமது. அவ்வேளையில் சம்பளம் வழங்குவதற்கு, கல்வித் திணைக்களமோ, வங்கிகளோ உரிய முறையில் இயங்கவில்லை. இச் சந்தர்ப்பத்தில் இவருக்கு வலது கரமாக செயற்பட்ட அருட்பணி ஜீவனதாஸ் பெனாண்டோ (அமதி) அடிகளார் பணத்தைத் திரட்டி ஆசிரியர்கள் வசித்த இடங்களுக்குச் சென்று நேரில் கையளித்த சம்பவங்கள் மனதை விட்டகலா பச்சை நினைவுகளாகும். எனது குடும்பம், பெஞ்சலோ சந்தியாப்பிள்ளை ஆசிரியர்களது குடும்பம் மடுவில் தங்கியிருந்த போது எமது சம்பளப்பணத்தை நேரில் எமக்கு வழங்கியதை என்னவென்று வர்ணிப்பது. HUDEC மூலமாக எமக்கு உதவிகள் வழங்கப்பட ஆவன செய்த அதிபர் தந்தையை நெஞ்சம் மறக்குமா?

**மாணவர்கள் மனதில் ஆழப் பதிந்தவர்**

பசுமரத்தாணிபோல் எனக்கு இன்னும் ஞாபகத்தில் உள்ளது. ஒவ்வொரு திங்கட்கிழமையும் பொதுக்கூட்டம் (Common Assembly) மதுரம் சதுக்கத்தில் இடம்பெறும். பெரும்பாலும் அதிபர் தந்தை அவர்களே அதனை முன்னின்று நடாத்துவார். மாணவப் பருவத்தில் பெரியோர்களைக் கனம் பண்ண வேண்டியதன் முக்கியத்துவத்தை அடிக்கடி மாணவர்களுக்கு வலியுறுத்துவார். பல சமூக நற்பழக்கவழக்கங்களை அவர் மூலமாகவே மாணவர்கள் அறிந்து கொண்டார்கள் என்று கூறுவது சாலப்பொருந்தும்.

பலர் மத்தியில் தும்மல் ஏற்படும்போது கைக்குட்டையைப் பயன்படுத்துதல், புத்தகத்தைப் புரட்டும் போது எவ்வாறு செயற்படவேண்டும். ஒருவரைச் சந்திப்பதற்குச் செல்லும் போது கதவு பூட்டப்பட்டிருந்தால் எத்தனை முறை கதவில் தட்டவேண்டும், உணவருந்தும் போது கரண்டிகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் அவர் மூலமாகவே பெரும்பாலான மாணவர்களும் ஏன் ஆசிரியர்களும்கூட அறிந்து கொள்ள முடிந்தது. தந்தையவர்களின் குருத்துவ வெற்றிவிழாவையொட்டி வெளியிடப்பட்ட மலரில் பல மாணவர்கள் தந்தையவர்களால் தாங்கள் பெற்றுக் கொண்ட நன்மைகளைப் பற்றியும் எழுதியிருந்தார்கள். அதில் ஒரு மாணவன் "எமது அதிபரின் பொன்மொழி ஒன்றுதான் அந்தவேளையில் என்னை ஒரு சில உதவிகள் செய்யத் தூண்டின" எனக் கூறுகின்றார்.

இன்னும் ஒரு மாணவன் "நீங்கள் ஒவ்வொருவரும் இன்று எடுத்துக் கொண்டவாக்குறுதிக்கேற்பவீட்டிற்கும்பாடசாலைக்கும் நாட்டிற்கும் ஏற்ற நற்பிரஜைகளாக வாழவேண்டும்"என்று அதிபர் தந்தையவர்கள் 1992ம் ஆண்டு எமது பாடசாலையின் குருளைச்சார ணருக்கான சின்னஞ்சூட்டு விழாவின் போது வழங்கப்பட்ட அவரது உரை என் மனதில் உறுதியாகப் பதிந்துவிட்டது எனக் கூறுகிறார். மற்றுமொரு மாணவன் "With his imposing and lovable personality he shines as an exemplary teacher , like a good parent, a loving friend and a guiding priest; we are proud of our Rector and we love him affectonately" என்று புகழாரம் சூட்டுகின்றார். அவரிடம் கற்ற, அவர் காலத்தில் கற்ற மாணவர்கள் இன்றும் கூட அவரைத் தங்கள் நினைவில் கொண்டுள்ளார்கள் என்பதற்கு என் போன்றவர்களே சாட்சிகள்.

**காரியமாற்றுவதில் கருத்தானவர்**

தனது இயல்பான திறமைகளைக் கொண்டு கருத்தறிந்து கல்லூரிக் காரியங்களைத் திட்டமிட்டு செயற்படுத்துவதில் வெற்றி கண்டவர். 1994ம் ஆண்டு மிகப் பெரிய அளவில் எமது கல்லூரியால் நடாத்தப்பட்ட கல்விக் கண்காட்சி இதற்குச் சிறந்த உதாரணமாகும். பழைய மாணவர்கள், ஆசிரியர் குழாமினரை ஒன்றிணைத்து இக் கண்காட்சி சிறப்பாக நடைபெற வழி சமைத்தார். மாணவர்களினதும் பொது மக்களினதும் வரவேற்பைப் பெற்றது இக்கண்காட்சி. போர்க்கால மேகங்கள் சூழ்ந்த காலத்தில் வளப்பற்றாக் குறை நிலவிய காலத்தில் துணிவுடன் இக்கண்காட்சியை நடாத்திய பெருமைஅருட்பணி பேணாட் அடிகளாரையே சாரும்.

எமது கல்லூரியில் அனுமதிப் பரீட்சை அண்மிக்கின்றது என்றால் ஆசிரியர்களுக்கு அளவற்ற மகிழ்ச்சி. வேலையும் வேலை தான். மகிழ்ச்சியும் மகிழ்ச்சிதான். ஒரு குடும்ப உணர்வுடன் அனைவரும் அதில் ஈடுபடுவோம். வேலைகள் பகிர்ந்தளிக்கப்படும். எந்தவொரு ஆசிரியரும் முகம் சுளிப்பதில்லை. விருப்பத்துடன் வேலைகள் நடந்தேறும். இடையில் தேனீர் உபசாரம் வயிறு நிறையும். தொடர்ந்து மதிய உணவு நிகழ்வு அனைவரும் (அருட்தந்தையர்கள் உட்பட) ஒரு வகுப்பறையில் ஒன்றுகூடி உண்டு மகிழ்ந்த அக்காலம் மீண்டும் வருமா என்ற ஆதங்கம். அத்துடன் முடிந்ததா? பிற்பகல் தேனீர் உபசாரம் அனைத்து வேலைகளும் நிறைவுற்று வீடு செல்ல 3, 4 மணியாகும். அவரது பணிக்காலத்தில் எம்மவரில் Patrician Family என்ற உணர்வு உறைந்திருந்தது.

எமது கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 150 வருட ஞாபகார்த்தமாக முத்திரை வெளியீட்டு வைபவமொன்று2000 ஆம் ஆண்டு இடம்பெற்றது. எமது கல்லூரியின் உருவப்படத்தைக் கொண்டு அம் முத்திரை 21.07.2000 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இதற்குரிய சகல ஏற்பாடுகளையும் வெற்றிகரமாக நிறைவேற்றிய பெருமை இவரையே சாரும். மேலும் எமது கல்லூரியின் Long Block கட்டடத்துக்கான ஆரம்ப வேலைகளும்

(தொடர்ச்சி 11ம் பக்.)

காவலன் கலசம்

காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம்

# வழிபாடு வாழ்வாகுமா!!



19

அருட்பணி ச.ஜே.சுரேந்திரராஜா அ.ம.தி
(sjsurenomi@gmail.com)

(சென்ற இதழின் தொடர்ச்சி....)

**பழைய ஏற்பாட்டில் இசையின் பயன்பாடு**

விப 15:1 மோசேயின் வெற்றிப் பாடல் இச 31:30 மோசேயின் பாடல் நீதி: 11:34, கேளிக்கை விருந்துகளில் எசா: 5:12, எண்: 21: 17-18, எசா: 21:12, எரே: 25:30, 48:33, 2அர: 3:15, 1சாமு: 16:23, தொநூ: 4:21,22 'அவன் சகோதரன் பெயர் யூபால். இவன்தான் யாழ் மீட்டு வோர், குழல் ஊதுவோர் ஆகியோர் அனைவரின் தந்தை. சில்லா தூபால் காயினைப் பெற்றெடுத்தாள். இவன் வெண்கலத்தாலும், இரும்பாலும் எல்லா விதமான கருவிகள் செய்யும் கொல் லன் ஆனான்'. இவ்வாறு பழைய ஏற்பாட் டில் காணப்படுகின்ற மிகச்சிறந்த உதார ணங்கள் அதன் அசையாத சாதனையை யும் அதன் மேல் கொண்ட அதீத பற் றையும் சுட்டிக்காட்டுகின்றது.

**புதிய ஏற்பாட்டில் இசைப் பயன்பாடு**

புதிய ஏற்பாட்டிலே இசையை எவ்வாறு பயன்படுத்தி அல்லது தமது ஆற்றல்களைப் பயன்படுத்தி வழிபாட்டிற்கு மெருகூட்டினர் எனபதற்கான ஆதாரங்கள் அதிகம் பெறமுடியாது உள்ளது. டிடாகே, மற்றும் உரோமைக் கிளமன்றின் முதலா வது கடிதம், பர்னபாவின் கடிதத்திலும் சில தகவல்களை நாம் பெறமுடிகின்றது. இவர்களின் காலத்தில் பாவனையிலிருந்த சில வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டே இந்த விடயத்தை ஊகிக்க முடி கின்றது. உதாரணமாக: ஆமென், அல்லே லூயா, மாரானாதா, அப்பா போன்ற வார்த் தைகளாகும். இசை மீட்டுவோரையும், பாடல்களைப் பாடுவோரையும் குறிப் பிட்டுக் காட்சியைத் தெளிவுபடுத்துகின் றார். இசையால் இறைவனைப் புகழமுடி யும். (காண். திருவெளிப்பாடு 14: 2-3) எபேசியர் 5: 19 'உங்கள் உரையாடல் களில் திருப்பாடல்கள், புகழ்ப்பாக்கள், ஆவிக்குரிய பாடல்கள் ஆகியவை இடம் பெறட்டும். உளமார இசை பாடி ஆண்ட வரைப் போற்றுங்கள். தவக்காலம் ஏனைய காலங்களில் இருந்து வேறுபடு கின்றது. இதன்போது இரண்டு முக்கிய வழி பாட்டுப் பாடல்கள் பாடுவதை இக்காலம் தவிர்க்கின்றது. முதலாவதாக 'உன்னதங் களிலே' என்கின்ற பாடலும், 'அல்லேலூ யா' என்கின்ற பாடலுமாகும். இதற்கான காரணமாக 'உன்னதங்களிலே' என் கின்ற பாடல் கிறிஸ்துவின் பிறப்பிலே வானதூதர்களால் பாடப்பட்ட ஒரு புகழ்ச்சி யின் பாடலாகும், (லூக்:2:13-14). இது கிறிஸ்துவின் வருகையை மையப்படுத்து கின்றது. மகிழ்வின் உச்சம் அவரது பிறப்பும், இரண்டாம் வருகையுமே. ஆனால் தவக்காலத்தின் போது எமது பாவங்களுக் காக மனம் வருந்தி, பரித்தியாகம் செய் யும் போது இப்பாடல்கள் பாடுவது அர்த்த மற்றதாகிவிடுகின்றன.

சொற்கள்சேர்வதனால்வார்த்தை உருவாகின்றது. சத்தங்கள் ஒருங்கிணை வதனால் இசை உருவாகின்றது எனக் கூறலாம். சத்தம் இதனால் உருவாகும் இசை பற்றிய ஆழமான இறையியல் சிந்தனையைக் கூறுவது பொருத்தம்என நினைக்கின்றேன். இசை இறை அனு பவங்களைப் பெற அமைக்கும் அழ கான வழியாக அமைகின்றது.

**1. இசை என்பது நிலையாமையின் அனுபவம்**

நாம் பேசும்போது அல்லது பாடும் போது ஒலியைக் கேட்கின்றோம் ஆனால் அதை மறுபடியும் அமைக்க முடியாது. வழி-பாடுகளில் பாடல்களைப் பாடும்போதும், இறைவார்த்தையைக் கேட்கும் போதும் அது எமக்குள் ஊடுருவுகின்றது. எமது உள் உணர்வுகளோடு உறவாடுகின்றது. இதற்காகத் தான் 'ஒருமுறை பாடுவது இரு முறை செபிப்பதற்குச் சமன்' என்று அழைப்பது சற்றும் பொருத்தமாகவே இருக்கின்றது. இறை அனுபவமும் இவ் வாறு தான் இருக்கவேண்டும். அவர் ஒரு முறை பேசியது உள்ளத்தில் ஒலிக்க வேண்டும்.

**2.இசை என்பது தொட்டுணர முடியாத அனுபவம்**

சத்தத்தைத் தொடமுடியாது ஆனால் சத்தம் எம்மைத் தொடவேண்டும். சுவ ரிலே தொங்கவிடப்பட்டிருக்கின்ற படங்கள் அல்லது சுருபங்களைப் பார்க்க முடியும், தொட முடியும் சில வேளைகளில் சுவைக்க கூடமுடிகின்றது. ஆனால் சத்தத்தை கேட்க மாத்திரமே முடிகின்றது.

(தொடரும்..)

# உருவாகி உருவாக்குவோம்!

எமது சிந்தனை, சொல், செயல் யாவும் ஒருங்கிணைந்து காணப்படும் பொழுதே எமது வாழ்வியல் உருவாக்கம் உதயமாகின்றது. நாம் நல்லவர்களாக வாழ்கின்றோம் என்பது எமது மனோபாங்கு உருவாக்குவதிலேயே தங்கியுள்ளது. எமது எண்ணங்கள் சீராக்கப்படும்பொழுது பிறர் வாழ்வு மகிழ்வினை அனுபவிக்கின்றது. 'நாம் எப்படி சிந்திக்கின்றோமோ அப்படியே நாம் இருக்கின்றோம்' என்று சிந்தனையின் சிறப்பியல்பை வர்ணித்தார் கௌதம புத்தர். எமது புதிய நல்எண்ணங்கள் எம்மை வளமுடன் வாழவைக்கின்றது.

எமதும் ஏனையோரதும் நல்எண்ணங்களில் உருவாகும் நல்வாழ்க்கையை எமதாக்கி, நற்சமூக உருவாக்கத்திற்கு வித்திட முயல்வது விவேகமான செயலாகவே விளங்குகின்றது. வியத்தகு எண்ணங்க ளின் வியாபகத் தன்மை விளம்பரமில்லா உயர் வாழ் வினை விளக்கமாகக் கொண்டு, அமைவதை அவதானிக்கலாம்.

உள்ளத்தால் உரசலிட்டு,
உயர் மூச்சால் இதயம் தொட்டு,
எண்ணத்தால் எழுச்சிபெற்று,
என்றும் நன்றாய் வாழ்ந்திட
எம் சொல்வீச்சால் இல்வாழ்வினைச்
சொர்க்கமாக மாற்றிடுவோம்.

'என் வாழ்வில் நீ பாதி, உன்வாழ்வில் நான் பாதி' என்றமைய, எம் வாழ்வை மாற்றிச் சுயநலத்தைக் குறைத்திடுவோம்.

*'அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்*
*இன்பநிலைதானே வந்தெய்தும் பராபரமே"*

என்று தாயுமானவர் சுவாமிகள் கூறுவதுபோன்று எம்மையும் நல்லோராக்கி, பிறரை யும் நல்வாழ்விற்கு உள்ளாக்கும் நற்பணியினை எமதாக்குவோம். முன்னேற்றகரமாகத் தொடரும் சந்தர்ப்பங்களை இழந்துவிடாது பெருமனதோடு ஏற்று, நிகழ்கால வாழ்வினை நிறைவானதாக ஆக்கிட, மனி தம் நிறைவாக மலர்ந்திட முயற்சி எடுப்போம்.

மனிதம் மதிக்கப்பட்டநிலையில் நாம் வாழ முற்படும்பொழுது, விலங்குகளையும்விட மேலான வர்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றோம். மனிதத்தை மதித்து, மனித நேயத்தை மதித்து, உயர்ந்தோராய் அவனியில் மகிழ்ந்திட அன்றாடம் முயலுவோம்.

எதனைக் கொண்டு அச்சம் கொண்டோமோ அதனை முறியடிக்க ஆவன செய்வோம். எதிர்நீச்சல் போட்டு, உள்ளத்தில் துணிச்சலான சிந்தனைகளைத் துளிர்விடச் செய்வோம்.

மனச்சோர்வில் மடிவதை விட்டு, நிகழ்காலத்தில் மகிழ்வோடு வாழ எத்தனிப்போம். நிகழ்காலத்தில் எதனை இலகுவாகச் செய்யமுடியுமோ அதனைச் சிறிது சிறிதாகச் செய்து முடிக்க ஆரம்பிப்போம். கடினம் எனக் கருதியதை, கட்டம் கட்டமாக, பகுதி பகுதியாகக் கூறுபோட்டு, படிப்படியாக வெற்றிப் படிகளில் ஏறிடுவோம். அருகில் வாழ்வோரின் கண்ணீர்த் துளிகளை ஆர்வத்துடன் துடைத்திடுவோம்.

"யதார்த்த உலகில் நேரிய உள்ளத்தோடு வாழப்பட்ட நிகழ்காலமே என்னை மகிழ்ச்சி உடைய வனாக்குகின்றது. எனது தூய மனநிலையே மகிழ்ச்சியின் அளவீடாகும். இறந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட எனது எளிமையான தொழில் நல்லதாயிருக்கலாம். இன்று செய்யப்படுகின்ற எனது எளிமையான பணியே மிகவும் உசிதமானது. ஏனெ-



னில், அது எனது ஆளுகைக்கு உட்பட்டது" என்று லூயிஸ் மாறி பாறன்ற் அ.ம.தி. உறுதிப்படுத்தினார்.

அருட்பணி. வின்சன் பற்றிக்

எய்யப்பட்ட அம்பு, பேசப்பட்ட வார்த்தை, இழக்கப்பட்ட சந்தர்ப்பம் ஒருபோதும் திரும்பிவரா. வாழ்வின் முன்னேற்றத்திற்காக கிடைக்கும் சந்தர்ப்பங்களை நழுவவிடாது, பெருமனத்தோடு ஏற்று, நிகழ்கால ஆற்றலை அதிகரிப்போம்.

"கோளின் பொறிஇல் குணம் இலவே
எண்குணத்தான் தாளை வணங்காற் தலை"

என்று திருவள்ளுவர் திருவாய் மொழிந்தார்.

அதாவது, பரிமேலழகரின் உரைப்படி, தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்கள் நீங்குதல், பேரருள் உடைமை, வரம்பில் இன்பமுடைமை, முடிவிலாற்றல் உடைமை ஆகிய இறைவனின் சிறப்புப் பண்புகள் எம்மை அலங்கரிக்கும்பொழுது, நாம் இறைவனுக்கும் மனிதருக்கும் ஒருங்கே உரித்தானவர்கள் ஆகின்றோம். ஒன்றாய், உடனாய், வேறாய் இருக்கும் இறைவன் தாள் பணிந்து, எம்மை இறைவனில் இழந்து நிற்கும்பொழுது, நாம் நிறைவு எய்துகின்றோம். இறைவனும் மனிதனும் இணைந்து பயணிக்கும்பொழுது, மனிதன் இயற்கை அனர்த்தங்களையும் செயற்கை அனர்த்தங்களையும் கடந்து, வாழ்வில் வெற்றிப் புன்னகையைச் சுவைப்பது சாத்தியமாகின்றது.

பறவையைக் கண்டு விமானம் படைத்த மனி தன், எதிரொலி கேட்டு வானொலி படைத்த மனிதன், தனக்குள் குழப்பத்தைத் தோற்றுவித்து சமூகத்தைச் சீரழிக்க முனைதலை முறியடிக்க நாம் ஒன்றிணைவது இன்று அவசியம் தேவைப்படுகின்றது. சமுதாயத்தில் சமநிலை தோற்றுவிக்கப்படுவதன் ஆரம்பக் கட்டமாக, தனிமனிதன் சந்தோசமாக வாழ்வதற்கு ஏற்புடைய சந்தர்ப்பங்கள் அதிகமாக உருவாக்கப்படவேண்டும்.

விலங்கின மனிதர்களே, திருந்திட வாருங்கள். தென்னை மரமொன்றில் குரங்குகள் மூன்று குந்தியவாறு கூறின:

"கேளுங்கள் நண்பர்களே,
கேவலம் நமக்கிது
நம்மிடம் இருந்துதான் மனிதர்கள் வந்தார்களாம்.
கட்டுக் கதையிது நம் கௌரவமே போகுது
குரங்குகள் ஒருபோதும்
தம் மனைவியரைப் பிரிவதில்லை.
தம் பிள்ளைகளைப்
பட்டினி போட்டுக் கொல்வதில்லை.
கம்பியோ தடியோ கொண்டு
பிற உயிரைக் காவுவதில்லை.
ஆமாம் மனிதன் உதித்தது
ஏதோவொரு இனத்திலிருந்துதான்.
ஆனால் அவன் நம்மோடு
சொந்தம் கொண்டாட அனுமதிக்கலாகாது.
தலைக்கனம் பிடித்த மனிதர்கள்
தரத்தால் குறைந்தோரே"

விலங்கின மனிதர்களாக வாழ்வதை விட்டு, திருந்திய திருமனிதர்களாக, புனித வாழ்வினை வாழ முன்வருவோம். தூய்மையுள்ளம் கொண்டோராய் தீமையினை முற்றுமுழுதாகத் தகர்த்தெறிவோம். துணிச்சலோடு நன்மனத்தைச் சார்ந்து, ஓயாத அலைகளாய், தூய அன்புக்குச் சான்று பகர்ந்து, அகிலத்தை மீட்போம்.

## காவலன் கலசம்

# கல்லறைகள் வகுப்பறைகளே!

(சாஞா 3:1-9. உரோ 6:3-9. மத் 25:31-46)



அருட்பணி லெரின் டிரோஸ்

இறந்து போன அனைவரையும் நினைத்துப் பார்க்கும் வகையில் அனைத்து ஆன்மாக்களை இம் மாதம் முழுவதும் நினைவுகூருகின்றோம். கல்லறைகளைச் சுத்தம் செய்கிறோம். அவைகளை அழகுபடுத்துகிறோம், மந்திரிக்கிறோம். இறந்து போன சொந்தங்களை நினைத்து அவர்களுக்காக கண்ணீரோடு செபிக்கிறோம்.

**"நீங்கள் இறந்துவிட்டாலும், உடலளவில் நீங்கள் எங்களோடு இல்லாவிட்டாலும், நாங்கள் உங்களை ஒருபோதும் மறக்கவில்லை. உங்களை, உங்களின் செயல்களை நினைத்துப் பார்க்கிறோம். இறப்பு நம்மைப் பிரித்துவிட முடியாது. நமது உறவு என்றும் தொடருகிறது"** என்ற செய்தியைத்தான் கல்லறைத் திருவிழாவிலே நாம் வெளிப்படுத்துகிறோம்.

அதேவேளையில், இந்நாளானது மனித மாண்பினை பறைசாற்றுவதாகவும் அமைந்துள்ளது. உடல் மற்றும் ஆன்மாவைக் கொண்டவன் மனிதன் கருவறையில் உருவான மனித உடல் கல்லறையில் அடக்கப்பட்டாலும், இவ்வுலகில் பிறக்கும் முன்பே மனிதன் இருப்பதையும், இறப்பு மனிதனின் முடிவு அல்ல என்பதையும் விவிலியம் நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. உதாரணமாக, "தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன். நீ பிறக்கு முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன்" என்று இறைவாக்கினர் எரேமியாவிடம் கடவுள் சொல்கிறார் (எரே 1:5). இதிலிருந்து பிறக்கும் முன்பே கடவுளின் எண்ணத்தில் மனிதன் இருப்பதை நம்மால் அறிய முடிகிறது. இறப்பு என்பது இழப்போ, துன்பமோ அல்ல என்பதைத் தெளிவுபடுத்துகிறது. எப்படி வாழ்ந்தால் இறவாமையில் பங்கு பெற முடியும் என்பதை நற்செய்தி வாசகம் (மத் 25:31-46) வெளிப்படுத்துகிறது. ஏழை எளிய மக்களுக்குச் செய்யும் சேவையின் மூலமே நிலை வாழ்வைப் பெறமுடியும் என்பதை வலியுறுத்துகிறது. இவ்வாறு, இறவாமையின் மூலம் மனிதன் கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்டவன் என்பதை நம்மால் உணர முடிகிறது.

கிறிஸ்தவ விசுவாசத்தைப் பொறுத்தவரை, கிறிஸ்து சாவை வென்று உயிர்த்தெழுந்தார். உயிரும் உயிர்ப்புமான அவர் அனைவரையும் உயிர்த்தெழச் செய்வார் என்பது உண்மையும் உறுதியும் ஆகும். (1கொரி 15:12 )

சாவில் மாற்றுரு பெறுகிறோமே தவிர, நாம் அழிவதில்லை என்பதே நமது விசுவாசம். (1கொரி 15:51). ஒவ்வொரு இறப்பும் மற்றொரு பிறப்பே என்பதை இந்றைய நாள் நமக்கு நினைவூட்டுகிறது.

கல்லறைகளை வகுப்பறைகள் என்றுதான் சொல்ல வேண்டும். அவைகள் சொல்லும் பாடங்கள்தான் எத்துணை! எத்துணை! அவைகள் வாழ்வின் யதார்த்தத்தை நமக்குப் போதிக்கின்றன. மனிதனின் இவ்வுலக வாழ்வு நிலையற்றது. பிறந்த மனிதன் ஒரு நாள் இறந்தே ஆக வேண்டும். "ஒருவரால் என்றென்றும் வாழ்ந்திட முடியுமா?" என்று கேட்கிறார் சங்கீத ஆசிரியர். (திபா 49:9). அதேவேளையில், எப்பொழுது, எங்கு, எப்படி, எதனால் இறப்போம் என்று எவரும் அறிவதில்லை. மனிதனின் பிறப்பும் இறப்பும் அவனுக்கு மறைபொருளே. பிறப்பும் நமது கையில் இல்லை. இறப்பும் நம்மிடம் கேட்டு வருவதில்லை. இவ்விரண்டிற்கும் இடைப்பட்டக் காலத்தை நமது கரங்களில் கடவுள் ஒப்படைத்திருக்கிறார். எனவே, எப்படியும் வாழலாம் என்ற தான் தோன்றித்தனத்தை விட்டுவிட்டு, இப்படித்தான் வாழ வேண்டும் என்ற திருமறை வழி வாழ கல்லறைகள் நமக்குக் கற்றுத் தருகின்றன.

ஒவ்வொரு கல்லறைத் தோட்டமும் சமத்துவபுரங்கள் என்றால் மிகையாகாது. கல்லறைகள் சமத்துவத்தைப் போதிக்கின்றன. உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்றோ, ஆண்டான் அடிமை என்றோ, பணக்காரன் ஏழை என்றோ, முதலாளி தொழிலாளி என்றோ, ஆண் பெண் என்றோகூட எந்தவிதமான வேறுபாடும் இல்லை.

"மனிதா! பிறப்பிலும் சமத்துவம். இறப்பிலும் சமத்துவம். ஏனெனில், இவை இரண்டும் கடவுளின் கையில். அனைத்து வேறுபாடுகளும் இவை இரண்டிற்கும் இடையில்தான். காரணம், அவையிரண்டும் உனது கையில். சமத்துவத்தில் பிறந்த நீ, சமத்துவத்தில் இறக்கும் நீ, ஏன் வேறுபாடுகளை ஏற்படுத்துகிறாய்?" என்னும் கேள்வியை எழுப்புகின்றன கல்லறைகள். முரண்பாடுகளைக் களைந்து வேறுபாடுகளைக் கொண்டாட அழைக்கின்றன. கல்லறைகளின் ஆழ்ந்த அமைதியை மயான அமைதி என்றே சொல்கிறோம். சமத்துவ உணர்வுடன் அமைதியுடன் வாழக் கற்றுத் தருகின்றன கல்லறைகள்.

மனித வாழ்வு நிலையற்றது என்பதால், நிலைகுலைய வேண்டிய தேவையில்லை. திடீரென்று மரணம் வரும் என்பதால் மிரண்டு போக வேண்டிய அவசியமுமில்லை. உருப்படியாக வாழ அழைப்பதுதான் கல்லறைத் திருவிழா.

**"சில்லறை தேடி அலையும் மனிதா! வாழப் பொருள் தேவை. அதேவேளை, வாழ்வதற்கும் பொருள் வேண்டாமா?"** என்று சிந்திக்கத் தூண்டுகிறது கல்லறைத் திருவிழா. நமது வாழ்வு இறைவன் நமக்குத் தந்துள்ள மாபெரும் கொடை. மாண்புமிக்க வாழ்வை நல்ல முறையில் வாழ நினைவூட்டுகிறன கல்லறைகள். சாவைப் பற்றிய சரியான புரிதல்தான் நம்மை முறையான பாதையில் வழி நடத்திச் செல்லும். சாவுதான் நம்மை வாழச் செய்கிறது. இவ்வகையில் ஒவ்வொரு கல்லறையும் சிறந்ததொரு வகுப்பறையே. இந்நாளிலே இறந்தவர்களை நினைப்போம். அவர்களுக்காகப் புலம்புவதைத் தவிர்த்து விட்டு அவர்களுக்காகச் செபிப்போம். அவர்கள் வழியாகச் செபிப்போம். கல்லறைப் பாடங்களை நினைவில் கொண்டு முறையான வாழ்வை நேரிய வழியில் நடத்துவோம்.

# 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

**ஈழத்தில் சங்கமித்த ஐரோப்பிய முத்துக்கள்**

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*



**அருட்சகோதரி மரியா இயூஸ் றொலா**

1953ம் ஆண்டு பங்குனி 9ம் திகதி குருநாகலுக்கு அனுப்பப்பட்டார். அங்கும் தலைவிக்கு உதவியாளராக இருந்து கடமைகளை நிறைவேற்றினா. 1955ம் ஆண்டு 63 வயது உடல்நலமற்ற நிலையிலும் நன்மனத்தோடு தன்பணிகளைச் செய்தார். இறைவனின் சொந்தக் குமாரத்தியாக வரவிரும்பினார் அது அருளப்படவில்லை.

1956ம் ஆண்டு பண்டத்தரிப்பு நவகன்னியர் இல்லத்திற்கு அனுப்பப்பட்டு, சித்திரை 25ம் திகதி தலைவிக்கு முதலாவது உதவியாளராகவும், பொருளாளராகவும் நியமிக்கப்பட்டார். இருகண்களும் சத்திரசிகிச்சை செய்யவேண்டியிருந்தது. 1966ம் ஆண்டு தை 15ம் திகதி மட்டக்கல மடத்திற்கு தலைவியாகவும் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டார். T.R.I சின்ன மட்டக்கல மக்கள் சிஸ்ரமார் முதல் முறையாக வந்த போது, மிகவும் கஸ்டமான நிலை போக்குவரத்திற்கு வாகனம் இல்லை. மடமும் கோவிலும் உயரமான இடம் மடமும் சிறியது. படிக்கட்டுக்கள், வழிகள் ஏறமுடியாது ஒருவாறு தேயிலைத் தோட்டத்து மக்கள் சந்தோசமாக வந்து உதவி செய்தார்கள். ஞாயிறு திருப்பலிக்கென தலவாக்கலவிலிருந்து ஒரு குருவானவர் வந்து மக்களுடன் திருப்பலி ஒப்புக்கொடுத்து செல்வார். தொழிலதிபர் முதலாளிமார் (கத்தோலிக்க) திருப்பலியில் கலந்து கொள்வதுடன் எம் சகோதரிகளுடனும் உறவை வளர்த்துக் கொள்வர். எம் சகோதரி செய்யும் சிற்றுண்டிகளைக் கொடுத்து யாவருடனும் அன்பை பரிமாறிக்கொள்வர். தோட்டத்து மக்கள் ஏழைகள் ஆயினும் தம் காணியில் மரக்கறிகள், பழங்கள் பயிரிட்டு சகோதரிகளுக்கும் பகிர்ந்துகொள்வர்.

முதல் முறையாக மட்டக்கலைக்கு மதர் யூஸ்ரலுடன் சிஸ்ரர். பொஸ்கோ, தெரேசியா, அட்றியல் மிகவும் ஒற்றுமையாகவும் சந்தோசமாகவும் இருந்து மக்களுடனும் அன்பாக இருந்தனர். மொழி மதர் யூஸ்ரலுக்குப் பிரச்சினையாக இருக்கவில்லை. சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்களுக்கும் ஆங்கிலம் பிரெஞ்சு மொழி கற்பித்தார். சகோதரிகள் பணிகளுக்குச் சென்று களைத்து வீடு வரும்போது, தாயன்புடன் அவர்களைக் கவனிப்பார்.

ஏழைகளுடன் மிகவும் அன்பாக இருப்பார். முன்மாதிரியையுள்ள வாழ்க்கையை எமக்கு விட்டுச்சென்றார். தனக்குத் தெரிந்த பிரான்சிய மொழியை தொழில் அதிபர்களுக்கும் சொல்லிக் கொடுப்பதில் மகிழ்ச்சி அடைவார். இவ்விதமாக சகலருக்கும் உதவியாக இருந்து, 1975ம் ஆண்டு நுகேகொடைக்கு அனுப்பப்பட்டுத் திரும்பி யாழ்ப்பாணம் வந்து 1985ம் ஆண்டு வைகாசி 29ம் திகதி யாழ் மடத்திலேயே மரணமானார். இவர் இறந்தாலும் இன்னும் எம் மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்.



**அருட்சகோதரி தியோப்பான் தாயார் (அமெல்டா)**

பிரான்சில் உள்ள பெற்றிபுவா என்னும் இடத்தில் 1872ம் ஆண்டு கார்த்திகை 17ம் திகதி அமெல்டா பிறந்தார். இவரின் பெற்றோர் நல்ல கிறிஸ்தவ விசுவாசம் நிறைந்த நேர்மையான விசுவாசிகளாவர்.

குடும்பத்தில் 8 பிள்ளைகள். Gustare தந்தைக்கு உதவி. Felicite வெலிசிற்றே தாய்க்கு உதவி. அஞ்சலீன் குழந்தை இல்லாத சிறிய தாயுடன் வளர்ந்தா. அமெல்டா 8 வயது வரை பெற்றோருடன் வாழ்ந்தார். 1882 ஆனி 24ல் Venard குருவினால் ஆயத்தம் செய்யப்பட்டு முதல் நன்மையும் 3 வருடங்களின் பின் உறுதிப் பூசுதலும் பெற்றுக்கொண்டார். 12 வயதுவரை பாடசாலைக்குச் சென்றார். பின்னர் தாயின் வழிநடத்தலில் வீட்டு வேலைகளையும் செய்து கொண்டு, 14 வயதில் நல்ல சுகத்துடன் வயல் வேலைகளையும் மேற்கொண்டார்.

பெற்றோரின் முன்மாதிரிகையினால் 20 வயது வரை அருட்சாதனங்களையும் பெற்றுவந்தார். தாய் அடிக்கடி குடும்பத்தில் ஒரு மகன் குருவாகவும் ஒரு மகள் சிஸ்ரராகவும் இருக்க விரும்புவதாகக் கூறிய போது, தான் மடம் செல்லமாட்டேன் என்றும் கூறினார். 1892ம் ஆண்டு தை 1ம் திகதி மாலை தன் சகோதரி வெலிசியாவிடம், கேட்டதற்கு, மறுமொழியாக "ஆம்" எங்களுக்கு மிஷன் பற்றி அறிவித்தார் என்று கூறினார். இவ்விதமான இறை வார்த்தைகள் அமெல்டாவுக்கு இறை அழைப்பைத் தூண்டிவிட்டன. குருவின் வேண்டுதலுக்கு செவி சாய்த்து பழையன யாவற்றையும் மறந்து, இறைவனுக்குத் தன்னை முழுமையாகக் கையளித்தார்.

## அருட்சகோதரி அம்புறோஸின் மார்க்

எனினும் இவை காட்சியே எனப் பயந்து ஒருவருக்கும் இதைப்பற்றிச் சொல்லவில்லை. நித்திரையின்மை, பசியின்மை எனவே Airvault சென்று துறவற சகோதரிகளுடன் உரையாடி இறை திருவுளம் எதுவென அறிந்து ஆன்மீகக் குழுவினால் வழிநடத்தப்பட்டார். புனிதர்களின் சரிதையும் வாசிப்பார். அமெல்டாவின் பெற்றோர், தம்பி குஸ்ரான் வீடு வந்து சேர்ந்ததும், ஆன்ம குருவின் ஆதரவுடன், அமெல்டா துறவு வாழ்வுக்குச் செல்வதற்கு அனுமதி அளித்தனர்.

(தொடரும்...)

# சர்வதேச உணவு தினத்தை நினைவுகூரும் கரித்தாஸ் இலங்கை வலையமைப்பு

## 16 அக்டோபர் 2020

**ஐ.நா. உலக உணவு தினம் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 16 அன்று அனுட்டிக்கப்பட்டு வருகிறது. 2020ம் ஆண்டுக்கான உலக உணவு தினத்தை நினைவுகூரும் முகமாக இக் கட்டுரை கரித்தாஸ் இலங்கை வலையமைப்பினால் பிரசுரிக்கப்படுகிறது.**

உலக உணவு தினமானது, உலகின் அனைத்து மக்களும், குறிப்பாக அதிக-ளவில் வறுமையாலும், பட்டினியாலும் பாதிக்கப்பட்டவர்களை அந்த நெருக்கடியிலிருந்து மீளுவதற்கும், வலுவான மற்றும் விரிவாற்றலுடைய உணவு பெறுகை முறைமைகளைப் பின்பற்றுவதற்கு உலகளாவிய ஒற்றுமையை வேண்டி நிற்கின்றது. இதன் மூலம் அதிகரித்து வரும் கால-நிலை மாற்றங்களுக்கு சிறந்த முறையில் முகம் கொடுக்க முடிவதோடு தரமான, தம்மால் கொள்வனவு செய்யக்கூடிய மற்றும் ஆரோக்கியமான உணவுகளை அனைவருக்கும் பெற்றுக்கொடுக்கவும் தமக்கென சிறந்த ஒரு வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக்கொள்ளவும் வாய்ப்பாக அமைகிறது.

கரித்தாஸ் இலங்கை தேசிய நிலையமும், அதன் 13 மறைமாவட்ட நிலையங்களும் 2013 ஆம் ஆண்டு முதல் - இலங்கையில் உள்ள வறுமைக் கோட்டுக்குக் கீழ்ப்பட்ட விவசாய பின்புலம் கொண்ட குடும்பங்களுக்கு உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், அவர்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்தவும் அர்ப்பணிப் புடன் செயற்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக அனுராதபுரம் , மட்டக்களப்பு மற்றும் குருநாகல் மறைமாவட்டங்களின் ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கிய தாக "உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக நிலையான விவ சாயத்திற்கான சமூக அமைப்புகளை மாற்றியமைத்தல்" எனும் தொனிப்பொரு ளில் பணிகள் செயற்படுத்தப்பட்டன. இதன்மூலம் விவசாயப் பின்புலம் கொண்ட வறிய குடும்ப உறுப்பினர் களைத் தேர்ந்தெடுத்து சிறிய சுய உதவிக் குழுக்களாக (SHGs) உருவாக்கி, அவர்களுக்குப் பயிற்சி அளித்து, முறை யான சேமிப்புகளை ஊக்குவித்து அவற்றை சமூக மட்ட அமைப்புகளாக (CBOs) உருவாக்குவது கரித்தாஸ் நிறுவனத்தின் பிரதான அணுகுமுறை யாகும். பின்னர் சமூக மட்ட அமைப்பு கள் பலப்படுத்தப்பட்டு மறைமாவட்ட அல்லது மாவட்ட அளவிலான சம்மேளனங்களாக ஒன்றிணைக்கப்படு கின்றன. குறித்த அமைப்புகளை அரச நிறுவனங்களின் கீழ் பதிவு செய்ய வழி கோலுவதோடு அதன் மூலம் அரச மானியங்கள், சேவைகளைப் பெற்றுக்கொள்ள ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களின் உரிமை களுக்காக சுயாதீனமாக செயற்படவும் குரல் கொடுக்கவும் வலுவூட்டலைப் பெற்றுக்கொடுக்கிறது.

இந்த 5 ஆண்டுத் திட்டத்தினை வெற்றிகரமாகச் செயற்படுத்தி, அதன் அடைவுகளின் அடிப்படையில், இலங் கையின் 25 மாவட்டங்களுக்கும் கரித் தாஸ் இலங்கையின் இந்தப் பணியைத் தொடர்ந்தும் விரிவுபடுத்த கரித்தாஸ் நோர்வேயாலும், நோராட் எனப்படும் நோர்வே அரசின் அபிவிருத்திக்கான நிலையத்தினாலும் வாய்ப்பளிக்கப்பட்டது. விவசாயப் பின்னணியைக் கொண்ட சமூகங்களின் ஏழ்மைக்கு அடிப்படைக் காரணம் வறுமை என்பதன் அடிப்படையில் இந்தத் திட்டத்தின் 2ம் கட்ட விரிவாக்கல் "வறுமைக்கான காரணங்களைக் கவனத்தில் கொள்ளலும், விவசாயிகளுக்கான உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்தலும்" எனத் தலைப்பிடப்பட்டு 2018ம் ஆண்டில் செயற்படுத்தத் தொடங்கி 2021ம் ஆண்டு இறுதி வரைக்கும் அமுல் படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

பயனாளிகள் தங்கள் வீட்டுத் தோட்டங்களில் பல்வகை மரக்கறிகள், பழவகைகள், மூலிகைத் தாவரங்கள், நாற்றுமேடைகள், உயிர் வேலிகள், விறகுத் தேவைக்கான மரங்கள், புல் நிலங்கள் அமைத்தல், உள்நாட்டு

**அனைவரும் ஒன்றிணைந்து வளர்ப்போம், ஊட்டமளிப்போம், நிலையாக பேணுவோம்!!**

மீன்கள், தேனீ, காளான் வளர்ப்பு மற்றும் சிறிய அளவிலான கால்நடை வளர்ப்பு (கோழி, ஆடு, மாடு, பன்றி, வாத்து, முயல், வான்கோழி) மற்றும் சேதன உரத் தயாரிப்புப் போன்ற வற்றில் ஈடுபட இந்தத்திட்டம் உதவுகின் றது. இதுபோன்ற ஒன்றிணைந்த பண்ணை முறைமையின் மூலம் பயன்பெறும் விவசாயக் குடும்பங்களி னால் சீரான ஊட்டச்சத்து நிறைந்த, ஆரோக்கியமான உணவைப் பெற்றுக் கொள்ள முடிகிறது.

கரித்தாஸின் இந்தப் பணி காரணமாக கோவிட்-19 சமூகக் கட்டுப்பாட்டுக் காலத்திலும் (Lockdown) கூட பயனாளிகள் தங்கள் வீட்டுத் தோட்டங்களிலிருந்து போதுமான உணவை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தமை அவர்களுக்கு ஒரு ஆசீர்வாத மாக அமைந்தது.

இக்காலப்பகுதியில் சில சமூக மட்ட அமைப்புகளின் (CBOs) உறுப்பினர்கள் தங்களுடைய அதிகப்படியான வீட்டுத் தோட்ட விளைச்சல்களைத் தேவை யுடையோருடன் பகிர்ந்து கொண்டமை இந்தத்திட்டத்தின் முக்கியத்துவத்தையும், வெற்றியையும் எடுத்தியம்புகிறது. இலங்கைக் கத்தோலிக்க திருஅவையின் சமூக சேவைப்பிரிவான கரித்தாஸ் இலங்கை - செடெக் நிறுவனமானது, தேசிய இயக்குனர் அருட்தந்தை. மஹேந்திர குணதிலக அவர்களின் வழிகாட்டலின் கீழ் ஐ.நா வின் எட்டு வகையான நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கு (SDGs) இந்தத் திட்டத்தின் மூலம் பங்களிப்புச்செய்கிறது.

**இலக்கு 1:**
எல்லா இடங்களிலும், எல்லா வகைகளிலுமான வறுமையை ஒழித்தல்,

**இலக்கு 2:**
பசியை ஒழித்தல், பட்டினியை விரட்டுதல், உணவுப் பாதுகாப்பை அடைதல், ஊட்டச்சத்து மேம்பாட்டை யும் எய்துதல் மற்றும் நிலையான, வளங்குன்றா விவசாயத்தை மேம்படுத்துதல்,

**இலக்கு 3:**
எல்லோருக்கும், எல்லா வயதிலும், நலம்குன்றா உயிர்வாழ்வை உறுதி செய்தலும், எல்லோருக்கும் எல்லா வயதி லும் நலவாழ்வை முன்னெடுத்தலும்,

**இலக்கு 4:**
யாவரையும் உள்ளடக்கிய, சமவாய்ப்புள்ள, சமத்துவமான, தரமான கல்வியை உறுதிப்படுத்துதல், மற்றும் எல்லோருக்கும் வாழ்நாள் முழுவது மான கல்வி கற்றலுக்கான வாய்ப்பை ஊக்குவித்தல்,

**இலக்கு 5:**
பாலின சமத்துவம் அடைதல், மற்றும் அனைத்துப் பெண்கள், சிறுமிக ளுக்கும் அதிகாரமளித்தலும்,

**இலக்கு 6:** சமமின்மையை, சமத்துவமின்மையைக் குறைத்தல்,

**இலக்கு 7:**
காலநிலை மாறுபாட்டையும் அதன் பாதிப்புகளையும் எதிர்கொள்ளக்கூடிய வகையிலான உடனடி நடவடிக்கை எடுத்தல்

**இலக்கு 8:**
சமாதானம், நீதி மற்றும் அமைதியான, யாவரையும் உள்ளடக் கிய சமூகங்களை உருவாக்குதல்

தவிர, 2025 ஆம் ஆண்டளவில் பட்டினியைப் போக்குவதற்கான "ஒரே மனித குலம், அனைவருக்கும் உணவு", என்ற திருத்தந்தை பிரான்சிஸின் அழைப்பை கரித்தாஸ் இலங்கை பின்பற்றி வருவதோடு இந்நிகழ்ச்சித்திட் டத்தின் ஒட்டுமொத்தக் குறிக்கோள் மற் றும் செயற்பாடுகள் அனைத்தும் திருத்தந்தை பிரான்சிஸின் சுற்றுமடல் 'Laudato Si' இற்கு ஏற்ப வடிவமைக்கப் பட்டுள்ளன.

**"உலகின் அனைத்து நிறுவனங் களையும், கத்தோலிக்க திரு அவைகளையும் அனைத்து மக்களை யும் ஒரே மனித குடும்பமாக எண்ணி, பசியால் வாடுபவர்களுக்காகக் குரல் கொடுக்குமாறு அழைக்கின்றேன், ஒருநாள் இந்தக் குரல் உலகை உலுக்கக்கூடிய ஒரு கர்ஜனையாக மாறும்."**

*-திருத்தந்தை பிரான்சிஸ்-*

2020 ஜுலை வரையில் இலங்கை முழுவதுமாக 525 கிராமங்களிலிருந்து 20,285 விவசாய பின்புலமுள்ள குடும் பங்களை கரித்தாஸ் இலங்கை வலை யமைப்பு அணிதிரட்டி, நிலையான விவசாய உத்திகளைப் பயன்படுத்தி அவர்களை சொந்த வீட்டுத்தோட்டங் களை உருவாக்க ஊக்குவித்திருக் கின்றது. இலங்கை முழுவதும் 32,265 பாடசாலை மாணவர்கள் சேதன பாட சாலைத் தோட்டச்செய்கையில் ஈடுபட் டுள்ளதோடு, அவர்களுக்கு சிறிய அளவிலான காய்கறி விதைகள் மற்றும் மரக்கன்றுகள் தங்கள் சொந்த வீட்டுத் தோட்டங்களில் பயிரிட வழங்கப்பட் டுள்ளன. இலங்கை முழுவதும் 16,527 முன்பள்ளிப் பிள்ளைகளின் தாய்மார்களுக்கு குடும்ப ஊட்டச்சத்துத் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ள தோடு, 30% க்கும் அதிகமான முன் பள்ளி பிள்ளைகள் துரித உணவு வகைகளைத் தவிர்ப்பதோடு இரசாயன பாவனையற்ற ஊட்டச்சத்து மிக்க உண-வைப் பெறுகின்றனர்.

இலங்கை முழுவதுமாக 296 மன-தளவிலும், உடலளவிலும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளும் இவ் உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்குள்



அருட்தந்தை. மஹேந்திர குணதிலக
தேசிய இயக்குநர்,
கரித்தாஸ் இலங்கை –செடெக்

உள்ளீர்க்கப்பட்டுள்ளதுடன், வீட்டுத் தோட்டச் செய்கையிலும் ஈடுபடுத்தப்பட் டுள்ளனர். இந்த ஈடுபாடு அவர்களுக்கு கூடுதல் வருமானத்தைப் பெற்றுக்கொள்ள வும், மன அழுத்தம், மனச்சோர்வுகளைத் தவிர்த்து சமூகத்தில் சாதாரண நபர்களாக நடந்து கொள்ளவும் உதவுகிறது.

கொவிட்-19ன் பரவலானது திட்டத்தின் சரியான செயற்பாட்டை ஓர ளவு பாதித்திருந்த போதிலும், விவ சாயிகளை வேலை செய்ய அரசாங்கம் அனுமதித்திருந்தது. நிலையான வீட்டுத் தோட்டச்செய்கைகளில் தங்களை ஈடு படுத்திக் கொள்வதன் முக்கியத்துவத்தைப் பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்த இந்த நெருக்கடி காலம் மிகவும் முக்கியமானது என்பதால், கரித்தாஸ் நோர்வே அளித்த பாதீட்டுத் திருத்தத்தைப் பயன்படுத்தி, வீட்டுத் தோட்டக் கைநூல்கள், விழிப் புணர்வுத் துண்டுப் பிரசுரங்கள், சத் துணவுப் பொதிகள், மரக்கறி விதைகள், பயிர்கள், பயிர்ப் பைகள், நீர்த் தாங்கிகள், வீட்டுத் தோட்ட உபகரணங்கள் மற்றும் கால்நடைகள் போன்றவற்றை வழங்கத் தேவையான ஏற்பாடுகளைக் கரித்தாஸ் இலங்கை வலையமைப்பு மேற்கொண்டிருந்தது. அதுமட்டுமன்றி முன்பள்ளிப் பிள்ளைகளின் தாய்மார்க ளுக்கு மரக்கறி விதைகள் மற்றும் பயிர்ப் பைகளையும் முன்பள்ளிகளுக்குக் கை சுத்திகரிப்பான்களையும் (Hand Sanitizers)வழங்கியது.

நான்கு ஆண்டுகளின் நிறை வில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 130,000 பயனாளிகள் நேரடியாகப் பயன்பெற்றிருப்பதோடு 200,000 க்கும் அதிகமானவர்கள் இறுதிப் பயனாளிக ளாக இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. உணவுப் பாதுகாப்பை உறுதி செய் வதிலும், உலக உணவு தின நினைவு கூரலிலும் பங்கேற்பது குறித்து கரித் தாஸ் இலங்கை வலையமைப்பு பெருமி தம் கொள்கிறது.

## வசிக்க அல்ல.. வாழ

இந்தப் பூமியில் சும்மா வசிக்க நாம் வரவில்லை. வாழ வந் திருக்கிறோம். விதைத்துக் கொண்டே இருங்கள். முளைத்தால் மரம். இல்லையேல் உரம். சலித்துக் கொள் பவன் ஒவ்வொரு வாய்ப்பிலும் உள்ள ஆபத்தைப் பார்க்கிறான். ஆனால் சாதிப்பவன் ஒவ்வோர் ஆபத்திலும் உள்ள வாய்ப்பினைப் பார்க்கிறான். உலகில் வாழுங்கள். ஆனால் அதில் ஒட்டிக் கொள்ளாதீர்கள்.

# கிறிஸ்தவம் இன்று உலகில் தோற்றுவிட்டதா?

(Has Christianity Failed in the world today)

**முன்னுரை**

கிறிஸ்தவம் இன்றும் ஓர் உயிர்ப்புள்ள மத மாகவே உலகில் நோக்கப்படுகின்றது. கிட்டத்தட்ட எண்ணிக்கையளவில் 100 கோடிக்கு மேற்பட்ட மக்கள் பின்பற்றும் மதமாகவே இருக்கின்றது. இப்படியிருக்கும் போது இப்படியொரு வினா தேவைதானா என்ற சந்தேகம் எழலாம். இக் கேள்வியின் மூலம் கிறிஸ்துவை உலகம் நிராகரித்து விட்டது என்றும் அர்த்தம் கொள்ள முடியாது. எனினும் திருச்சபையின் புதுப்பித்தலுக்கும், இறை மக்களின் புதுப்பித்தலுக்கும் இக் கேள்வி பல விடைகளைக் கொடுக்கலாம். இன்று கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவத்தை (Christianity without christ) நாம் வாழ்கின்றோமா என்ற கேள்வியும் இங்கு எழுகின்றது. இக்கேள்விக்கு அடிப்படையாக அமைவது கிறிஸ்தவத்தைப் பற்றிய சுய சோதனையும், சுய மதிப்பீடும் என்று சொன்னால் மிகையாகாது. இந்த இரு அடித்தளங்களில் நின்று எழுந்த தேடலாகவே எமது கேள்வி எழுகின்றது. கிறிஸ்தவத்தை "மதம்" (religion) என்ற வட்டத்தைத் தாண்டி வாழ்க்கை முறையாக ( way of life) பரந்த, வீரியமான வாழ்வோடு தொடர்புபட்ட நிலைக்கு நகர்த்துவதே இன்றைய காலத்தின் தேவையாகும். இத்தகைய உண்மைத்தளமான தேடலுக்குக் கள நிலைமையை தலத் திருச்சபை கவனத்திற் கொள்வது புதுப்பித்தலுக்கு இன்றியமையாதது. ஆலயங்களைக் கட்டியெழுப்புவது அவசியமானது தான், அதைவிட மேலாக இறைமக்களைக் கிறிஸ்தவ குழுமங்களாகக் கட்டியெழுப்புவது தான் அதைவிட முக்கியமானதும் சவாலானதும் கூட. இந்த அடித்தளத்தில் ஒரு சுய தேடலாகவே இக்கட்டுரை அமைகின்றது.

**கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவமா?**
**(Christianity without christ)**

கிறிஸ்தவம் உலகளவிய மதம் என்பதில் இரு கருத்து இருக்க முடியாது. இங்கு மதம் என்பது கோட்பாடுகள், அறிவுரைகள், ஒழுக்க நெறிகள் தொடர்புபட்டது மட்டுமல்ல, கிறிஸ்தவத்தைப் பொறுத்தமட்டில் ஒரு ஆளைப் (Person) பின்பற்றுவதற்கான அழைப்பே என்று சொன்னால் மிகையாகாது. கிறிஸ்தவம் போதனைகளை அறிவுரைகளைக் கொண்டிருந்தாலும் கடவுள் மண்ணில் மனிதனாக வாழ்ந்து என்றும் வாழும் இயேசுக் கிறிஸ்துவோடு உறவிலே வாழும் வாழ்க்கை முறையாகும் என்றும் இன்றும் எத்தனையோ கிறிஸ்தவர்கள் ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. எல்லா வழிபாடுகளும், ஆராதனைகளும் இதனை மையப்படுத்தியதாக அமையாதவிடத்து இருட்டில் கறுத்த பூனையை தேடுவதற்குச் சமமாகிவிடும். ஆலயங்கள் பெருகிய அளவு ஆன்மீகம் கிறிஸ்தவர்களிடையே பெருகவில்லை. கிறிஸ்தவர்கள் மத்தியில் சகோதரத்துவ உறவுகளை வளர்ப்பதைவிட பக்தியை, வழிபாடுகளை, திருவிழாக்களை வளர்ப்பது தான் முதன்மையாகக் கருதப்படுகின்றது. இதனால் கிறிஸ்தவம் அமைப்பு ரீதியாக வலுப்பெற்றுள்ளதே தவிர, வாழ்க்கையளவில் சாட்சியமாக வாழப்படவில்லை என்பதே உண்மையாகும். கிறிஸ்தவம் மதம் என்ற ரீதியில் வாழ்க்கையில் ஊன்றிய அளவு, மக்கள் இதயங்களில் கிறிஸ்தவ மனநிலைகள் ஊன்றியதாகத் தெரியவில்லை. இது ஒரு கசப்பான உண்மையாகும்.

கிறிஸ்துவோடு நாம் கொள்ளும் உறவை (Enounter) மையப்படுத்தியதாகக் கிறிஸ்தவம் வாழப்படுகின்றபோதே கிறிஸ்தவர்களின் வாழ்க்கையை ஊடுருவக்கூடியதாக இருக்கும். இது ஒரு படிப்படியான நீண்ட பயணமும் அனுபவமுங்கூட. இன்று கிறிஸ்தவர்கள் வெறும் பக்தர்களாகவே இயேசுவின் சீடத்துவத்தை விளங்கிக் கொள்வதால் கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவமாகவே இன்று கிறிஸ்தவம் வாழப்படுகின்றது என்பதே உண்மையாகும். இன்றைய புதுப்பித்தல் ஒரு அகநிலைக் கடப்பிற்கு (Paradigm Shift) கிறிஸ்தவர்களை இட்டுச் செல்கின்ற போதே கிறிஸ்துவை மையப்படுத்திய வாழ்க்கை முறைக்குக் கிறிஸ்தவர்களை நகர்த்த முடியும். கிறிஸ்தவத்தை வெறுமனே சடங்குகளுக்குள்ளும், பக்தி முயற்சிகளுக்குள்ளும், திருவிழாக்களுக்குள்ளும் மேய்ப்புப் பணி சார்ந்த சில பணிகளுக்குள்ளும் முடக்கக்கூடாது. இத்தகைய வெளியடையாளங்களினூடாகக் கிறிஸ்துவோடு உறவை நெருங்கிய முறையில் வளர்க்க இவைகள் கிறிஸ்தவர்களைத் தூண்டுவதாக அமைதல் இன்று அவசியமாகின்றது. எனவே கிறிஸ்துவை மையப்படுத்திய வாழ்வே கிறிஸ்தவத்திற்கு உயிர் கொடுக்கும் என்பதும் இது சாட்சிய வாழ்விற்கும் வழிசமைக்கும் என்பதில் இரு கருத்து இருக்க முடியாது.

**அன்பியம்**
**தமிழ்ப் பண்பாட்டில் தாக்குப் பிடிக்குமா?**

அன்பியம் என்பது தொடக்கக் கிறிஸ்தவ குழுமங்கள் உயிர்த்த இயேசுவினால் உந்தப்பட்டு வாழ்ந்த வாழ்க்கை முறையாகும். இது இயல்பாக அவர்களிடையே உயிர்த்த இயேசுவின் அனுபவத்தினால் ஏற்பட்ட வாழ்க்கை மாற்றமாகும். அன்பியத்தின் வேர்களை இன்றைய காலகட்டத்தில் நோக்கும்போது அது தொடக்கத்தில் லத்தீன் அமெரிக்க நாடுகளில் அடிப்படை மனித குழுமங்களாகவே (Basic Human Communities) தோற்றம் பெற்றன.

தங்கள் குழுமம் சார்ந்த அடிப்படை மனிதத் தேவைகளைத் தீர்த்து வைக்கும் ஒரு உந்து சக்தியாகவே உருவாகியது என்பதை மறுக்க முடியாது. இதன் பின்புலத்திலேதான் அடிப்படைக் கிறிஸ்தவ குழுமங்கள் உருவாகின என்பது வரலாறாகும். இந்த அடித்தளத்தில் எமது தமிழ்ப் பண்பாட்டில் அன்பியங்கள் வேரூன்றுமா என்ற கேள்வி எழுகின்றது.

அன்பியங்கள் எமது தமிழ்ச் சமூகத்தில் வேரூன்றுவதற்குப் பல தடைகள் உள்ளன. எமது சமூகத்தில் ஊறிப்போன பாரம்பரியங்கள், பாகுபாடுகள்,





சாதிய வேறுபாடுகள், குடும்பங்களுக்கிடையிலான பிரச்சினைகள் அன்பியங்கள் வளர்ச்சி பெறுவதற்கு நிச்சயம் தடைகற்களாகவே அமையும் என்பதில் சந்தேகமில்லை.

தொடக்கக் கிறிஸ்தவ சமூகத்தில் அது நிலைத்து நிற்பதற்கு அடிப்படையாக அமைந்தது உயிர்த்த இயேசு ஆண்டவரின் அனுபவமாகும். இன்று இத்தகைய அடித்தளம் எமது பங்குச் சமூகங்களில் நிலவுகின்றதா என்பதையும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். அன்பியங்கள் ஒரு திணிப்பாக தலத்திருச்சபையில் அமையக்கூடாது. எமது பண்பாட்டு வேர்களை, கூறுகளை புதுப்பிப்பதாக நற்செய்தியின் ஒளியில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக அமையாதவிடத்து அன்பியங்கள் பங்குத் திருச்சபையில் நிலைத்து நிற்பதற்கு சாத்தியங்கள் அருகியே காணப்படுகின்றது. பெரும்பாலும் அவை சிறு செபக்கூட்டங்களாக, பங்கு நிர்வாகச் செயற்பாடுகளை இலகுபடுத்தும் இன்னொரு அமைப்பாகவும் மாற்றமடைய வாய்ப்புண்டு. தமிழ்ப் பண்பாட்டில் வேரூன்றியுள்ள நற்செய்தி மதிப்பீடுகளுக்கு எதிரான கூறுகள் இருக்கும் வரை அன்பிய வாழ்க்கை முறைகள் சவாலாகவே அமையப் போகின்றது என்பதே உண்மையாகும். எனினும் அன்பியங்கள் பங்கேற்புத் திருச்சபையை உருவாக்குவதற்கும் கிறிஸ்துவை மையப்படுத்திய கிறிஸ்தவ வாழ்விற்கும் இன்றியமையாத தொடக்க நிலை (Stepping stone) என்று சொன்னால் மிகையாகாது. திருச்சபையை தெருச்சபையாக மாற்றுவது இன்றைய காலத்தின் கட்டாயமாகும். இதற்கு அன்பியங்கள் நிச்சயம் உதவலாம்.

இன்றைய பின் நவீனத்துவ சமூகச் சூழலில் சமூகத் தொடர்பு சாதனங்களே வாழ்க்கையை ஆக்கிரமித்துள்ளன. மக்களுக்கிடையிலான நேரடி உறவுகளும், உரையாடல்களும் பின்தள்ளப்பட்டுள்ளன. இன்று கிறிஸ்தவர்களும் இந்த உலகியல் மாற்றத்திற்கு விதிவிலக்கலானவர்களல்ல. இதனால் அன்பிய வாழ்க்கை முறைக்கு ஈடுபாட்டுடன் ஒத்துழைப்பார்களா என்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். இன்றைய கொரோனாச் சூழலும் மக்களைத் தனிமைப்படுத்தி வைத்துள்ளது. மக்கள் அன்றாட வாழ்க்கைக்கே அல்லலுறும் வேளையில் அன்பியங்கள் மக்களிடையே பகிர்வை, உதவியை, பிறர்நலத்தைத் தூண்டுவதற்கான செயற்பாடுகளில் ஈடுபட முடியும். அன்பியம் திருச்சபையில் கிறிஸ்தவத்தை புதிய வடிவத்தில் வாழும் முறை என்பதில் இரு கருத்தில்லை. அது எப்படிச் செயற்பட முடியும் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

**கொரோனாச் சூழல் மாற்றத்திற்கு வழிசமைக்க வேண்டும்!**

இன்று உலகளாவிய ரீதியில் உயிர்கொல்லி நோயான கொரோனாவால் ஒரு அச்ச நிலை உருவாகியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. இது இங்கு வாழும் எம்மவரையும் பாதித்துள்ளது. மீண்டும் ஆலயங்கள், வழிபாடுகள், ஆராதனைகள் முடக்கப்பட்டுள்ளன. இன்று பெரும்பாலானோர் மதத்தைப் பற்றி அக்கறை கொள்ளுகின்ற ஒரு சூழல் இல்லாத நிலை காணப்படுகின்றது. அன்றாடம் காய்ச்சிகளுக்குத் தங்கள் வாழ்வைப் பற்றிய கவலையும் சிந்தனையுமே மேலோங்கி நிற்கின்றது. கடவுள் தேவைக்கு, ஆறுதலுக்கு மட்டும் என்ற எண்ணக்கருவே அவர்கள் உள்ளங்களில் வேரூன்றிக் கிடக்கின்றது. ஆன்மீக வறட்சி பெரும்பாலும் இன்றைய சூழலில் பெரும்பாலானவர்கள் மத்தியில் தோன்றி விட்டது. இத்தகைய பின்புலத்தில் புதுப்பித்தல், அன்பிய செயற்பாடுகள் மக்களை ஈர்க்கக்கூடிய அளவில், செல்வாக்கு செலுத்தக்கூடிய அளவில் இருக்குமா என்பது கேள்விக்குறியே.

இன்றைய கொரோனாச் சூழலில் குடும்ப ஆன்மீகத்தை மையப்படுத்திய புதுப்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதே காலத்திற்குப் பொருத்தமானதாக அமையும். இன்று கிறிஸ்தவம் வாழபடுகின்ற மதமாக மாறுவதற்கு மாற்றுச் சிந்தனைகள் அவசியமாகின்றது. இச்சூழலை எதிர்கொண்டு நேரிய முறையில் கிறிஸ்தவத்தை, நம்பிக்கை வாழ்வை ஆழப்படுத்தக்கூடிய வழிமுறைகளைப் பற்றிச் சிந்தித்து செயற்படுவதே சமகாலச் சூழலின் தேவையாகும். அன்றாடம் காய்ச்சிகளாக வாழும் கிறிஸ்தவர்களை உள்ளீர்க்கும் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளித்தல் அவசியமாகும். சிலவேளைகளில் தலத் திருச்சபையானது ஓரளவு வசதியோடு வாழும் கிறிஸ்தவர்களின் ஆன்மீகத் தேவைகளை மட்டும் கருத்திற் கொள்ளக்கூடாது. வழமையான ஆன்மீகச் செயற்பாடுகள் சிலவேளைகளில் இன்றைய கொரோனாச் சூழலில் நம்பிக்கை வாழ்வைக் கட்டியெழுப்பப் போதுமானதாக இருக்க முடியாது. இன்று கொரோனாவில் பாதிக்கப்பட்டு, வறுமையில் வாழும் மக்களின் நலனையும் முன்னிலைப்படுத்தி, புதுப்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறும்போதே கிறிஸ்தவ வாழ்க்கைக்கான மாற்றத்தின் உந்து சக்தியாக எல்லோரையும் உள்ளீர்க்கக்கூடியதாக இருக்கும். இல்லையெனில் தலத் திருச்சபை காலத்திற்கு ஒவ்வாத திருச்சபையாக காலத்தின் குறிகளை உய்த்துணராத திருச்சபையாக மாறக்கூடிய வாய்ப்புண்டு. காலத்தின் சூழலை, மக்களின் உணர்வுகளை (Pulses) உள்வாங்கி மேய்ப்புப்பணிச் செயற்பாடுகளை முன்னெடுப்பதே கிறிஸ்தவத்தை ஓரளவாவது வாழ்வாக்கக்கூடியதாக இருக்கும் என்பது எமது நம்பிக்கை. இதனை பங்குத் திருச்சபைகள் கவனத்திற் கொள்ளுமா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

**அருட்கலாநிதி. ஸ்ரனி அன்ரனி**

## குழந்தைகளைப் புரிந்து கொள்ளுங்கள்

பெற்றோர் இப்போதெல்லாம் குழந்தைகளைப் புரிந்துகொள்ளத் தவறி விடுகின்றனர். தாங்கள் முக்கியம் என்று கருதும் பொருட்கள் தான் சிறந்தது எனத் தவறாகக் கருதுகின்றனர். பணம், பொருள் இவைகளைக் கொண்டு குழந்தைகளின் உலகத்தைச் சுருக்கி விட்டனர். 5 வயதுக்குழந்தை தன் தந்தை வாங்கி வீட்டில் நிறுத்தியிருந்த புதிய காரில் தன் கையிலிருந்த சிறிய கல்லினால் கிறுக்க ஆரம்பித்தது. அதைக் கண்ட தந்தைக்குக் கோபம் தாங்க முடியவில்லை. தன் புதிய காரில் கிறுக்கிவிட்ட கோபத்தில் குழந்தையை கையிலிருந்த இரும்புக் கம்பியால் அடித்தார். குழந்தை துடியாய் துடிக்க இரத்தம் பெருக்கெடுத்தோட குழந்தையைத் தூக்கிக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றார். பரிசோதித்த மருத்துவர் குழந்தையின் விரல் நசுங்கி விட்டதால் அதனை உடனே அறுவைச் சிகிச்சை செய்து அறுத்தெறிந்து விட்டு குழந்தையைக் காப்பாற்றினர். அவமானமும் குற்றவுணர்வும் மேலோங்க காரில் குழந்தை என்ன கிறிக்கியிருக்கிறது என்று பார்த்தார். ' I Love you daddy' எனக் குழந்தை எழுதியிருந்தது. பணமும் பொருளும் அந்தஸ்தும் மட்டுமே உலகமாகிவிட்ட பெற்றோர்களுக்கு குழந்தைகள் கற்றுத்தரும் பாடம் இதுதான். அன்புக்கு விலை இல்லை. குழந்தைகளும் கடவுளும் குணத்தால் ஒன்று.

காவலன் கலசம் காவலன் கலசம் காவலன் கலசம்

# காவலன் கலசம்

# என் கேள்விக்கென்ன பதில்!




*(நிர்மலா, யாழ்ப்பாணம்)*
**கேள்வி: சமைக்கும் சாப்பாட்டில் உப்புமில்லை, புளியுமில்லை, ருசியுயில்லை என எப்போதும் புலம்பும் வீட்டுக்காரர்களுக்கு என்ன செய்யலாம்?**
**ப:** நித்தி, இப்படிப்பட்டவர்களைத் திருத்த கொரோனா போன்றதொரு காலம் உங்களுக்கு மீண்டும் வராது, ஆகவே, இக்காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்! இப்படித்தான் ஒரு குடும்பத் தலைவர் தன் மனைவி சமைக்கும் சமையலில் ருசியில்லை என குற்றம் சுமத்தி வந்திருக்கின்றார். தன் கணவனுக்குப் பாடம் புகட்ட எண்ணியிருந்த அப்பெண் மணி, சில நாள்களுக்கு முன்பு கோவிட் 19 வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்தும் விசேட சுகாதாரப் பிரிவுக்கு அழைப்பை ஏற்படுத்தி, தன் கணவனுக்குச்சாப்பாட்டில் ருசியை உணரமுடியாதுள்ளதாக கூறியிருக்கின்றாள். அவர்கள் வந்து அவனை அள்ளிக்கொண்டு போய் பதின்னான்கு நாள்கள் தனிமைப்படுத்தி வைத்திருந்திருக்கின்றார்கள்! ஏனெனில், கோவிட் 19 வைரஸ் தொற்றுள்ளவர்களுக்கு ருசியை உணரமுடியாதிருப்பதும் நோய்க்கான ஓர் அறிகுறி! எப்படி இருக்கின்றது நிலைமை! யாருடன், எந்த நேரத்தில், என்ன பேசுகின்றோம் என்பதைச் சரியாகப் புரிந்துகொண்டு பேசவேண்டும்.
*(எழில், யாழ்ப்பாணம்)*
**கே: 20 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேறிவிட்டது. இனி என்ன!?**
**ப:** எழில், தனிநபர் நாடகங்களும்தனிநபர் நடிப்புக்களும்தான் நடக்கப்போகின்றன!
*(மேரி, வவுனியா)*
**கே: கோரோனா தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் அவ்வப்போது தப்பி யோடுகின்றார்கள் எனச் செய்திகள் வருகின்றன. இவ்வாறு தப்பி ஓடுகின்றவர்களை என்ன செய்யலாம்?**
**ப:** மேரி அக்கா, சம்மந்தப்பட்டவர்களுக்கு விடயத்தை விளக்கி புரிதலை முதலில் ஏற்படுத்தவேண்டும். சம்மந்தப்பட்டவர் ஒத்துழைத்தால் சரி. இல்லையென்றால், காவல்போட்டுக் கண்காணிக்க வேண்டும். அதற்கும் கட்டுப்படவில்லை என்றால், கட்டிவைக்க வேண்டியதுதான்!
*(அன்ரன், யாழ்ப்பாணம்)*
**கே: இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்க வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் மைக் பொம்பியோ, 'சீனா இலங்கையை வேட்டையாடுகின்றது' எனக்கூற, அக்கருத்துக்குப் பதிலடியாக கொழும்பிலுள்ள இலங்கைக்கானசீனத்தூதரகம் 'அமெரிக்க இரண்டைவேடம் போடுகின்றது' என்று சாடியிருக்கின்றது. இவற்றில் எது உண்மை?**
**ப:** அன்ரன், சந்தேகத்துக்கு இடமில்லாமல் இரண்டுமே.
(ஜெனி, இளவாலை)
**கே: குறிப்பிட்ட காலத்தில் ஆசிரிய நியமனம் பெற்றவர்களுக்கு சிங்களம் சித்தியில்லை என்றால் இங்கிறிமென்ற் இல்லை என்கின்றார்கள். ஆனால், ஆங்கிலம் இல்லை என்றால் ஓகே. இலங்கை என்ன சிங்கள தேசமா?**

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

**ப:** சட்டத்தில் இல்லை! ஆனால், இக்கட்டத்தில் அப்படித்தான் இருக்கு, ஜெனி!
*(அமல், யாழ்ப்பாணம்)*
**கே: மெகா சீரில் பார்த்து அழும் பெண்களுக்கு என்ன ஆலோசனை கூறுவீர்கள்?**
**ப:** அமல், மெகா சீரில் பார்த்து அழும் பெண்களைவிட கல்யாண சீடீ பார்த்து அழும் ஆண்களே அதிகம் என்றும் ஒரு கருத்துக் கணிப்புச் சொல்கின்றது! அப்படியென்றால், யாருக்கு முதலில் ஆலோசனை வழங்கவேண்டும் என்ற கேள்வி ஒரு பக்கம் இருக்க, மறுபக்கம் யாருக்கு ஆலோசனையும் ஆற்றுப்படுத்தலும் கொடுக்கப்படவேண்டும் என்பதைப்பற்றியும் சிந்திக்கவேண்டி உள்ளது.
*(திபெக்ஷன், மாமூலை, முள்ளியவளை)*
**கே: பிறரைப்போல் நாம் வாழ வேண்டும் என்று எண்ணுவது சரியா? அல்லது நம்மைப்போல பிறர் வாழ வேண்டும் என்று நினைப்பது சரியா?**
**ப:** தம்பி திபெக்ஷன், பிறரைப்போல் நாம் வாழவேண்டும் என்று நினைத்தால் எல்லாமே பிழைத்துப் போய்விடும்! ஒவ்வொருவரும் தமக்கேற்றவாறு வாழ்க்கையை வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் வாழ்க்கைபற்றி ஒவ்வொருவரின் எண்ணங்களும், எதிர்பார்ப்புக்களும் ஆளுக்கு ஆள் முற்றாகவே வேறுபடலாம். அவ்வாறாயின், அது பெரும் சிக்கல்களை உருவாக்கும்! அத்துடன் ஒவ்வொருவரின் வாழ்க்கைப் பிரச்சினைகள், வாழ்ந்த - வாழுகின்ற சூழல், தொழிலால் கிடைக்கின்ற வருமானம், செய்யும் செலவு போன்றவை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக அமையும். ஆகவே, பிறரைப் பார்த்து அவர்களைப்போல் வாழ நினைப்பது தேவையற்றது. ஆயினும், பிறரின் முன்னுதாரணமான எடுத்துக்காட்டுக்களை நாம் நமது வாழ்க்கைப் பாடமாகக் கொள்ளலாம். அது நம்முடைய வாழ்க்கைக்கு உந்து சக்தியாக இருக்கலாம். மேலும், நமது சொல்லால், செயல்களால், நடத்தையால் மற்றவர்களுக்கு முன்மாதிரிகையாக விளங்கலாம். அது, நம்மைப் பார்த்து மற்றவர் வாழ்வில் உயர உதவும். விளங்கங்களில் உள்ள வித்தியாசங்கள் புரிகின்றதா திபெக்ஷன்?

**அருட்பணி செ. அன்புராசா**

*(மலர், மன்னார்)*
**கே: என் கேள்விக்கென்ன பதில் சுப்பராப் போகுது. தொடர்ந்து இப்படியே போகுமா?**
**ப:** மலர், போகும் வரை போகும்!
*(சாந்தன், மன்னார்)*
**கே: உங்களுக்கு அரசியல் நன்றாக ஓடுகின்றது. அரசியலும் நன்றாகத் தெரியுமா?**
**ப:** சாந்தன், உங்களைப்போல் பெரிதாகத் தெரியாது, கொஞ்சமாகத் தெரியும்!
*(தாஸ், யாழ்ப்பாணம்)*
**கே: பதவிகளில் இருக்கும்போது தன்னை விட்டால் ஆளில்லை என்ற தலைக்கனத்தில் இருந்தவர்கள் பதவியிலிருந்து ஓய்வுபெற்றதும் அவர்களை யாரும் கவனிப்பதில்லையே! ஏன்?**
**ப:** தாஸ், தலைக்கனத்தில் இருப்பவர்கள் மற்றவர்களை மதிப்பதில்லை. அவர்கள் தங்கள் மூலத்திற்குத் திரும்பும்போது பதவி அவர்களுடன் இருப்பதில்லை. அதனால் அவர்களை யாரும் கணக்கில் எடுப்பதில்லை!
*((வரன், யாழ்ப்பாணம்)*
**கே: என் கேள்விக்கென்ன பதில் வர-வரச் சூடுபிடித்துக்கொண்டே செல்கின்றது. விடியவிடிய இருந்து யோசிக்கின்றீர்களா?**
**ப:** வரன், விடியவிடிய இருந்தும் யோசிக்கிறனான். விடிந்ததன் பிறகும் இருந்து யோசிக்கிறனான்!
*(ராணி, யாழ்ப்பாணம்)*
**கே: உங்களது பதில்களை வாசிக்கின்றபோது விழுந்து விழுந்து சிரிக்கக்கூடியதாக எழுதுகின்றீர்கள். எப்படி இவ்வாறு எழுத முடிகின்றது?**
**ப:** ராணி அக்கா, நீங்கள் விழுந்து விழுந்து சிரிப்பதில் எனக்குச் சந்தோசம். ஆனால், சிரித்துக்கொண்டு விழுந்து விடாதீர்கள். பிறகு, பழி பாவமெல்லாம் என் மீது வந்துவிடும்! அடுத்து, எப்படி இவ்வாறு எழுத முடிகின்றது என்று கேட்டிருக்கின்றீர்கள்! எவ்வாறு இவ்வாறு எழுதுகின்றேன் என்பது பற்றித்தான் நானும் யோசித்துக் கொண்டிருக்கின்றேன்!

---

# நிலா பார்த்துக்கொண்டே இருக்கின்றது

**அருட்பணி எஸ்.அஜந்தன்**

**1969 நிலாத்தரை**

அப்போலோ விண்கலமும் முதல் முதலாக நிலாவில் தரையிறங்கி நிற்கிறது. நாசா கட்டளைத் தளத்திலிருந்து கட்டளை பிறக்கிறது உங்கள் அப்பெலோ விண்கலம் நிலவில் தரையிறங்கி விட்டது.

ஹலோ.... ஹலோ.... இப்பொழுது தலைமை விமானி எட்வின் அல்றின் முதலாவதாக இறங்கி நிலவிலே கால் பதிக்கலாம்.

டிக்... டிக்... டிக்.. அல்றினின் கைகளில் கட்டியிருக்கிற கடிகாரத்தின் சத்தம் பயங்கரமான இடியைப்போல நெஞ்சைப் படபடக்கச் செய்கிறது. கன்னத்தில் கொஞ்சம் வியர்க்கிறது. விரல்கள் நடுங்குவது வெளிப்படையாய் தெரிகிறது.

ஏற்கனவே குறிக்கப்பட்ட இலக்குத்தான். இது ஒரு அக்கினிப் பிரவேசம். இதுவரை யாரும் நிலவில் இறங்கியது இல்லையே.

இதுதான் தயக்கத்திற்குக் காரணம். நிலவின் தரை எப்படி இருக்கும். கால் வைத்ததும் பெரும் சாம்பல் பள்ளங்களுக்குள்ளே மூழ்கி இறந்து விட்டால்?

புவியீர்ப்பு இல்லாத வெளி. கட்டுப்பாட்டை இழந்து, அண்டவெளியில் அங்கேதும் தொலைந்துவிட்டால்?

நிலவில் பரந்துகிடக்கும் ஏதோ ஒரு பயங்கர வாயு, என் உடைகளில் தாக்கம் புரிந்து எரிந்து சாம்பலாகினால்...

தயக்கம்.. தயக்கம்... தயக்கம்.

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லையே. அதன் அகன்ற சிறகுகளில் ஏறிக்கொள்வோரைச் சுமந்து கொண்டும், கீழே குதிப்போரை விட்டு விட்டும் காலம் நகர்ந்து கொண்டுதானே இருக்கின்றது

நிமிடங்கள் நகர்ந்துவிடுகின்றன. தலைமை விமானி எட்வின் சி.அன்றினோடு இன்னும் இருவர் விண்கலத்தில் இருக்கின்றனர்.

தலைமை விமானிக்குரிய நேரம் முடிந்ததும், அவர் இறங்கியதாகக் கணித்த விண்வெளி மையம் இரண்டாவது அறிவித்தலை அனுப்புகின்றது.

இனி துணை விமான விண்கலத்திலிருந்து இறங்கி நிலவில் கால் பதிக்கலாம்.

ஏற்கனவே இடுப்புப் பட்டிகளை கழற்றி இறங்கத் தயாராக இருந்த துணை விமானி கட்டளை பிறந்த அடுத்த நொடி விண்கலம் திறந்து கீழே இறங்கினார்.

இதோ அந்தக் கால்கள் நிலாத் தரையைத் தொடுகின்றன. மானிடத்தின் மிகப் பெரிய பாய்ச்சல் ஒரு பெரும் வரலாறு நிகழ்ந்து விடுகிறது.

நிலா, பூமி, சூரியன், காற்று உள்ள காலம் வரை அவனுடைய காலடிச் சுவடுகள் அழிந்து போவதேயில்லை.



அந்தக் காலடிகளுக்குச் சொந்தமான துணை விமானியின் பெயர் நீல் ஆம்ஸ் ஸ்ரோங்.

இனி இவன் பெயர் நிரந்தரம். நிலத்தில் இருந்து நிலவுக்கு பாய்ந்த முதல் கால்கள் இவனுடையவை.

வாய்ப்பு வந்து இவரது கதவைத் தட்டியபோது சட்டென திறந்தான் சரித்திரமானான்.

பகல் கனவு கண்டுகொண்டு கட்டில் சூட்டின் சுகத்தில் மறுபக்கம் புரண்டு படுத்தபடி, நாளை பார்க்கலாம் என்ற தாமதம் வரலாறு உன்னை புறங்கையால் தள்ளிவிட்டு நகர்ந்து போவதற்கு காரணமாகலாம்.

இந்த வாழ்க்கையே ஒரு வாய்ப்புத் தானே. ஒரே ஒரு முறை தரப்படுகிற சந்தர்ப்பம். உன்னைப் பட்டை தீட்டிக் கொண்டே இரு. வைரமாகுவாய்.

இராமேஸ்வரம் தெருக்களிலே காற்சட்டையோடு பத்திரிகை விற்றுத் திரிந்த ஏழைப் பையன் A.P.J.அப்துல் கலாம் உலகப் பெரும் ஏவுகணை விஞ்ஞானியாய் இந்தியாவின் ஜனாதிபதியாய் ஆக முடிந்ததே. உயரங்கள் நோக்கிப் பறத்தலுக்கான தீராப் பெரும் கனவு அவரை இயக்கிக்கொண்டே இருந்தது.

நீண்டதூரம் ஓடி வந்து விட்டேனே, வாய்ப்புக்கள் பல கண்முன்னே நழுவிப் போனதே. அல்லது என் வாழ்வு எப்படி இருந்திருக்கும்? இனி என்ன செய்வது சவக்காலைக்குப் போவதற்கு ஒத்திகை பார்ப்பதா?

ஒரு கதவு சாத்தப்பட்டால் இன்னொரு கதவு திறக்கப்படும். கண்கள் சூரியச் சுடர்களாய் ஒளிகொண்டு விழித்திருக்கட்டும். வாய்ப்புக்கள் வராவிட்டால் நீங்களே உருவாக்குங்கள்.

உங்கள் முதல் காலடிக்காய் பல உலகங்கள் காத்திருக்கின்றன ஆபத்தில் கொஞ்சம் துணிந்து இறங்குங்கள்...

அதோ நிலா பார்த்துக்கொண்டே இருக்கின்றது.




(சென்றவாரத் தொடர்ச்சி...)

**பிற கிறிஸ்தவ சபைகள் அவற்றின் போதகர்கள் மற்றும் புரட்டஸ்தாந்து பாடசாலைகளது தாக்கம்**

பல கத்தோலிக்கர் தொடர்ச்சியாக புரட்டஸ்தாந்து சபையினரும் தாமும் ஒரே இயேசுக்கிறிஸ்துவையே நம்புவதாலும், வழிபடுவதாலும் உண்மையான இறை நம்பிக்கை எது என்று குழப்பமடையத் துவங்கி படிப்படியாகக் கத்தோலிக்க திரு அவைக்கும் பிரிவினை கிறிஸ்தவ சபைகளுக்குமிடையே அடிப்படையில் வேறுபாடுகள் இல்லையென்று கருதுமளவுக்குச் சென்றுள்ளனர். கிறிஸ்தவர்களல்லாதோர் (இந்துக்கள் போன்றோர்) முதலாக ஒரே இயேசுக்கிறிஸ்துவைப் போதிக்கும் கிறிஸ்தவ சபைகளிடையே வேறுபாடுகளை அவதானித்துப் பார்த்தால் நாம் அவர்களுக்கு நற்றெய்தியை அறிவிக்கும் போது அவர்களைப்புரிய வைப்பதற்கும், மதம் மாற்றுவதற்கும் மிகவும் கடினமாகவுள்ளது.

பல கிறிஸ்தவ சபைகள் (அங்கிலிக்கன் திருச்சபை, திருச்சபை நற்செய்தி அறிவிப்புச்சபை, விசுவாசப்பரப்புதல் சபை, கூலி மிஷன் (Cooly Mission) ஸ்கொட்லாந்து பிரஸ்பிற்றேறியன் சபை, டச் (Dutch) திருச்சபை, வெஸ்லியன் திருச்சபை, பப்ரஸ்ட் திருச்சபை, அமெரிக்கன் திருச்சபை ஆகியவை) கத்தோலிக்கத் திரு அவைக்கு எதிராகச் செயற்படும் போது ஓரணியின் கீழ் செயற்படுகின்றனரென்றுதான் கூற வேண்டும். அத்துடன் இச்சபைகள் இங்கிலாந்து அரசிடமிருந்தும் இன்றும் பல்வேறு வெளிநாட்டு அமைப்புக்களிடமிருந்தும் பெருமளவு பணத்தைப் பெற்று வருகின்றன. மேலே சுட்டிக் காட்டப்பட்ட குறைகளைக் களைவதற்கும் கத்தோலிக்க திரு அவையின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதற்கும் பின் வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

**மறைப் பணியாளர்கள்**

கத்தோலிக்கரது ஆன்மீகத் தேவைகளை நிறைவு செய்வதற்கும் அவர்களுக்குப் போதிய மறையறிவை வழங்குவதற்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கு மிக இளம் வயதிலிருந்தே மறை யறிவைப் புகட்டுவதற்கும் ஐரோப்பிய, சுதேச மறைப்பணியாளர்கள் இன்னமும் கூடுதலாகத் தேவைப்படுகின்றனர். ஏற்கனவே வந்துகொண்டிருக்கும் இம்மறைப் பணியாளர்களின் பணியினால் பல நல்ல விளைவுகளைக்காணக்கூடியாதாயுள்ளது.

**பெற்றோர்**

பெற்றோரைப் பொறுத்தளவில் நாம் ஏற்கனவே அவர்களுக்கு அறிவுரைகளை வழங்கிவருகின்றோம். தங்களுடைய பிள்ளைகள் (ஆண், பெண் இருபாலாரும்) கல்வியறிவும், மறை யறிவும் பெறுவதில் ஊக்கம் காட்டாத பெற்றோரை வன்மையாகக் கண்டித்தும் வருகின்றோம்.

**பாடசாலைகள்**

கத்தோலிக்க பிள்ளைகள் புரட்டஸ்தாந்து சபைகளின் பாடசாலைகளுக்குச் சென்று திசைமாறிச் செல்வதைத்தடுக்க இன்னும் பல கத்தோலிக்க பாடசாலைகள் திறக்கப்படவேண்டும்.

**ஆன்மீகப் பயிற்சிகள்**

யாழ் திருத்தூது முதல்வராலும் சில தேர்ந்தெடுக்கப்பட்ட மறைப் பணியாளர்களதும் முயற்சியால் (சில மறைத்தளங்களில் ஏற்கனவே நடாத்தி முடிக்கப்பட்ட மகாஞானொடுக்கங்கள் வழியாக) இறைவனது உதவியுடன் நற்பயன்கள் விளைந்துள்ளன. எனவே குறைகளைக் களைவதற்கும் கத்தோலிக்கரது ஆன்மீகத்தை வளர்ப்பதற்கும் இது போன்ற முயற்சிகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

**கத்தோலிக்க அழுத்தகம்** (press)


ஒவ்வொருவருடமும், ஒவ்வொருமாதமும், ஒவ்வொருவாரமும் புரட்டஸ்சாந்து சபையினரால் குறிப்பாகக் கொழும்பில் கத்தோலிக்க மதநம்பிக்கைக்கும் திரு அவையின் அருளடையாளங்கள், வழிபாட்டு முறைகள், வரலாறு போன்றவற்றுக்கெதிராக அச்சிடப்பட்டு இலங்கை முழுவதும் விநியோகிக்கப்படும் நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் பத்திரிகைளுக்கு அளவுகணக்கில்லை. சில உண்மைகளும் கலந்து இவற்றில் வலம் வரும் பொய்கள் கணிசமான கத்தோலிக்கரால் முதலாக நிரூபிக்கப்பட்ட உண்மைகளாக அல்லது ஓரளவு உண்மைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் துரதிர்ஷ்டவசமாக இவற்றின் வழியாக அலையெனப் பாய்ந்துவரும் தவறுகளுக்குச் சரியானப் பதிலடிகொடுக்க இதுவரையில் (1861 வரை) எங்களிடத்தில் சரியான ஊடகங்களோ, செயற்பாடுகளோ இல்லை. எனவே அவர்கள் பயன்படுத்தும் கருவிகளையே அதே ஊடகங்களைப் பயன்படுத்தி மேற்படி விஷமப் பிரசாரங்களுக்குத் தகுந்த பதிலடி கொடுக்க வேண்டிய அவசிய அவசர தேவையுண்டு. எனவே கத்தோலிக்க அழுத்தகம் (press) ஒன்று இத்தீவில் கட்டாயம் இருக்க வேண்டிய பயனுள்ள அத்தியாவசியமான தேவை என்பதை உணர்கின்றோம். அண்மையில் பொன்ஜின் அடிகளால் வெளியிடப்பட்ட முதல் துண்டுப் பிரசுரங்களும், சிறிய நூல்களும், மடல்களும் எவ்வளவு பயனுள்ளவையாக இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும். இவற்றுக்குக் கத்தோலிக்ர் வெளிப்படுத்திய உணர்வலைகளிலிருந்து இவை எவ்வளவு பயனுள்ளவையாகவும் காலத்தின் தேவையாகவும் இருந்துள்ளன என்பது புலனாகும். அது மட்டுமல்ல கணிசமானளவு புரட்டஸ்தாந்து சபையினரும் தமது கேள்விக்குரிய கோட்பாடுகளும் சுட்டிக்காட்ட ஒருவருமில்லை யென்ற போக்கில் எடுக்கப்படும் நிலைப்பாடுகள் இனியும் பொன்ஜின் அடிகளாரின் ஆணித்தரமான,ஆதாரபூர்வமானகருத்துக்களுக்கு முன் செயலிழந்து போகும் என்பதை உணரத்துதொடங்கியுள்ளார்கள். அதன் விளைவாக அவர்கள் தமது கருத்துக்களையும் கோட்பாடுகளையும் மிகவும் கவனமாக முன்வைப்பதற்கு மட்டுமல்ல கத்தோலிக்க திரு அவையின் கோட்பாடுகளைக் குறை கூறுவதையும் கணிசமாகத் தவிர்க்கத்தொடங்கியுள்ளனர். எனவே கத்தோலிக்க அழுத்தகம் ஒன்று இருந்தால் அங்கு வெளியேறி வரும் நூல்களின் உதவியுடன் கத்தோலிக்க திரு அவைக் கோட்பாடுகளுக்கெதிராக வரும் பிரசுரங்களுக்குத் தகுந்த பதிலடியை உடனுக்குடன் வழங்க முடியும் கொழும்புத் திருத்தூது மாவட்டத்தில் கத்தோலிக்க அழுத்தகம் ஒன்றை அமைக்கும் திட்டத்திற்குத் தேவையான பங்களிப்பையும், பண உதவியையும் வழங்க அங்குள்ள கத்தோலிக்கரில் கணிசமானோர் முன்வரத்தயாராயுள்ளனர். இப்போதைக்கு இலங்கையின் கத்தோலிக்க அழுத்தகம் ஒன்று அமைப்பதற்குக் கொழும்பு தான் சரியான இடம்.

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

(தொடரும்...)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் மரண அறிவித்தலும்

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
(யோவான் 11:25)



காலம் எம்மைப் பிரித்து விட்டாலும்
கண்ணியமான வழிநடத்தலை
மறக்கவே முடியாது
ஞானத்தில் இறை நம்பிக்கையை ஊட்டி
அதில் வளர்ந்துவர
வலது கரமாயிருந்தீர்கள்
ஆலயப்பணிகளிலே தயங்காது உழைக்க
குடும்பத்தாருக்கு அதி ஒத்தாசை புரிந்தீர்கள்
வளர்பிறையாய் உம் குடும்பம் வளர
தேய்பிறையாய் தேய்ந்துபோன
தியாகச்சுடரே
பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் நிறை குடமாய்
மண்ணிலே பலர் மதிக்க
வாழ்ந்தது போதுமென்று
விண்ணுலகம் நோக்கியே
விரைந்து சென்றாயோ?
எம் துன்ப வேளைகளில்
நீங்கள் இல்லையென
எம் உள்ளம் தவிக்கின்றது
எம் உயிர் துடிக்கின்றது
உங்களைப் பிரிய
மனம் வலிக்கின்றது
எம் உயிரே
எம் கண்ணீரைக்
காணிக்கையாக்குகின்றோம்

## திரு. யக்கோப்பிள்ளை மடுத்தீனுப்பிள்ளை

**மண்ணில்**
**1925.11.10**

**விண்ணில்**
**2020.11.10**

**எழுவைதீவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யக்கோப்பிள்ளை மடுத்தீனுப்பிள்ளை (துரை) அவர்கள் தனது பிறந்ததினமாகிய 10.11.2020 அன்று காலமானார்.**

அன்னார்: காலம் சென்ற யக்கோப்பிள்ளை, மரியப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் பிலிப்புப்பிள்ளை (நட்சத்திரம்) லூர்த்தம்மாவின் அன்பு மருமகனும் மாக்கிரேட்டம்மாவின் பாசமிகு கணவரும், எலிசபேத்தம்மா (ராணி) மற்றும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை, தொம்மைப்பிள்ளை (பாக்கியம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆரோக்கியநாதர் (இராசநாயகம்) மற்றும் காலஞ்சென்றவர்களான இருதயநாதர் (சிங்கராசா), பேதுருப்பிள்ளை (பொன்ராசா) ஆகியோரின் மைத்துனரும், பிரான்சிஸ் மனோகரன், செபஸ்ரியன் குரூஸ் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்), அன்ரனி (ராசன் - கனடா), ஜோண் பாஸ்கரன் (இலங்கைக் கடற்படை தனியார் ஊழியர்), ஜோசப்ஜெறாட், மேரிஜடா, மேரிகிறீடா, காணாமல் ஆக்கப்பட்ட கபிரியேல்பிள்ளை தேவராசா மற்றும் காலஞ்சென்றவர்களான மரியதாஸ் (செல்வநாயகம்), மரியநாயகி, மேரி கில்டா, கிறிஸ்ரியன் பெர்னாண்டோ, மேரி யசிந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், கிளமென்ற் அஞ்சலா (ஜெயா), மல்லிகா (அதிபர்), மரிய நீற்றா (யோதினி - கனடா), மேரியூட்ஸ் (றெஜி), மயூறா, வின்சென்டி (போல்), கயசிந் ரவீந்திரகுமார் மற்றும் காலஞ்சென்றவர்களான லூர்துமேரி (சறோசா), மேரி லூட்ஸ் (டெலா ஆகியோரின் மாமனாரும், மரியடொறிஸ் (முன்பள்ளி ஆசிரியர்), மரிய அன்ரனிற்றாறோஸ் (ஆசிரியர்), அருட்சகோதரி மரிய விதுஷிகா A.C (பியற்றீஸ்), அருட்சகோதரன் பிரகாஷ் நிஜந்தன் (OMI), பிரகாஷ் ஜெயந்தன் (ikman.lk field officer), சாள்ஸ் யோகராசா (மலேசியா), பீற்றர் யோகரட்ணம் (Area supervisor Sony), மேரி அமலினி, ஜஸ்ரன்றிக் (University of Sri Jayewardenepura), ஜெனிற்ராடொறீன், டெறின் (கனடா), யசி (கனடா), லக்சிக்கா லென்சிக்கா, ரிறோண் (Civil Engineer), ரிறோஜன் (Cargils Bank Jaffna), ரிஷான், மேரி வினோதா, மேரி விஜிதா, அன்ரனி டினோஷன், மேரி பவிதா (University of Jaffna), மேரி டினோஷா, மேரி டிஷாளினி, லூட்ஸ் றனுஷா, கசிஸ்றக்ஷன், கனிஸ்றகிஷன் மற்றும் காலஞ்சென்றவர்களான யசோதா, லலிதா, வேளாயினி ஆகியோரின் பேரனும், யேசுதாசன், கபிஷாளினி (மலேசியா), கரிப்பிரதாஸ் (விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்) மற்றும் காலஞ்சென்ற றொக்சன் குரூஸ் ஆகியோருக்கு பேரப்பிள்ளைகள் வழிவந்த பேரனும், மேரி சோபியா, மேரி கிறேசியா, ஜோண்கலின் (மலேசியா), சஸ்வின் (மலேசியா), மெலோனா, கெவின், கெவின்சியா ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் 11.11.2020 அன்று முற்பகல் 11.00 மணியளவில் எழுவைதீவு புனித தோமையார் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.**

**4ம் வட்டாரம்,**
**எழுவைதீவு**

**தகவல்: குடும்பத்தினர்**

AD/79

# காவலன் கலசம்

## 6ம் மாத நினைவஞ்சலி



மண்ணில்
29 . 11 . 1939

விண்ணில்
05 . 05 . 2020

### திருமதி சிசிலியா தார்சீசியஸ் (பவா)

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவன் இறப்பினும் வாழ்வான் (யோவான் 11:25)

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும்
மண்ணை விட்டுப் பிரிந்து நீங்கள் விண்ணோக்கிச் சென்றாலும்
எம் கண் விட்டு மறையாமல் எந்நாளும் இருப்பீர்கள்

வாழ்வும் உயிருமான இறைவா!
உம் திரு முன் வந்திருக்கும் உம் அடியாளை
உம் அரவணைப்பில் ஏற்று
முடிவில்லாத வாழ்வில் அவருக்குப் பங்களித்தருளும்

92A, குவாரி வீதி,
தெகிவளை

உமது பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

AD/77

## 25ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
20 . 09 . 1918

விண்ணில்
07 . 11 . 1995

அமரர்

### செல்வி அருளம்மா மார்க்கு

ஓய்வு நிலை ஆசிரியர், நவாலி

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவளாய்
வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் இருபத்தைந்தாயினும்
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருப்பீர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

21/A ஜானகி லேன்,
பம்பலப்பிட்டி

பிரிவால் துயருறும்
திருமதி லில்லி ஜேசுதாசன்
குடும்பத்தினர், உறவினர்

AD/76

## 31 ஆம் நாள் நினைவுகள்







மண்ணில்
30 . 04 . 1946

விண்ணில்
17 . 10 . 2020

### அமரர் திருமதி யோசேப்பின் தேவநாயகம்

"கோதுமைமணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்"

(யோவான் 12:24)

**கண்ணீர் அஞ்சலி**

குடியிருந்த கோவிலம்மா - நீ எம்மை இக்குவலயத்தில் தவிக்கவிட்டுக்
குருபரனைக் கும்பிடவா கடுகதியில் பறந்து சென்றீர்

தாயென்னும் கோவிலம்மா உன்னை - தவிக்கவிட்டு வாழ்ந்த துயர்
தாங்க முடியவில்லையம்மா உன் கடனை
எப்படித்தான் தீர்த்து வைக்கப்போகின்றோம்

உன் பிரிவின் வேதனையால் உடன் பிறந்த சகோதரரும்
உம் அருமைக் கணவரும் பிள்ளைகளும்
உற்றார் உறவினரும் அயலவரும் அன்பர்களும்
ஆன்மா அமைதிபெற இறைவனை வேண்டுகின்றோம்

AD/72,73

### நன்றி நவில்கின்றோம்

எனது அருமை மனைவி யோசேப்பின் தேவநாயகம் அவர்களின் மரணச்செய்தி கேட்டு, வைத்தியசாலைக்கு உடன் வந்து என்னுடைய துயரில் பங்குகொண்ட எனது அருமையான திருக்குடும்ப சபை மாகாணத் தலைவிக்கும், ஏனைய அருட்சகோதரிகளுக்கும், எனது அன்பான நண்பர்களுக்கும் எனது நன்றிகளை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் அவரை வைத்தியசாலையில் பராமரித்த வைத்தியர்கள், தாதியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக. இவருடைய இறுதி இரங்கல் திருப்பலியினையும், இறுதிச் சடங்குகளையும் நிறைவேற்றிய திருக்குடும்ப துணைக்குருக்களுக்கும் ஏனைய அருட்பணியாளர்களுக்கும் இன்னும் அனுதாபச் செய்தியைப் பகிர்ந்துகொண்ட மதிப்புக்குரிய யாழ் மறை மாவட்ட ஆயர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

திருப்பலியில் கலந்து செபித்த ஒவ்வொரு திருக்குடும்ப பொது நிலையினருக்கும் எமது நன்றிகள். எமது இல்லம் வந்து, எம் துயரில் கலந்து எமக்கு ஆறுதலாக இருந்த திருக்குடும்ப சபைப் பொதுநிலையினருக்கும், பொறுப்பான அருட்சகோதரிகளுக்கும், அனைத்துப் பொதுநிலையினருக்கும் ஏனைய துறவற சபை அருட்சகோதரிகளுக்கும், யாழ் தியான இல்ல அருட்தந்தையருக்கும், பணியாளர்களுக்கும், அனைத்துப் பக்திச் சபையினருக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

வெளி மாவட்டங்கள், வெளிநாடுகளிலிருந்து அனுதாபத்தைத் தெரிவித்த அனைவருக்கும், மலர் வளையம், மலர்ச் செண்டுகள் சாத்திய அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். என்னுடைய துயர நேரத்தில் என்னோடு தோளோடு தோள் நின்று என் மனைவியின் மரண நிகழ்வை சீராக நடாத்திய எனது அருமையான நண்பர்கள், உற்றார், உறவினர்களுக்கும், எனது சிறப்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என் மனைவியின் 31ம் நாள் நினைவு ஆன்ம சாந்தித் திருப்பலிகள் 16.11.2020 அஞ்சலி நினைவு தின அழைப்பிதழில் குறிப்பிட்டபடி நாட்டின் அசாதாரண சூழ்நிலையில் மாற்றம் ஏதும் ஏற்பட்டால் நடைபெறும்.

பிரிவால் துயருறும்
அருமைக் கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள்

முகவரி: 4A அச்சுக்கூட வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: திரு.போச

## நான் கண்ட....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அருட்பணி A.I. பேணாட் அடிகளார் அதிபராக இருந்த காலத்திலேயே மேற்கொள்ளப் பட்டது. அக்கட்டடத்துக்கான அடிக்கல்லை அதிபர் அவர்களே நிறுவினார். நாட்டின் போர்ச்சூழல் காரணமாக அதன் கட்டட வேலைகள் தாமதப்பட்டன. அதற்கான மூலப் பொருட்களைப் பெறுவதில் பல சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டன. இன்று அக்கட்டடம் நிமிர்ந்து நிற்பதற்கான காரண கர்த்தா அதிபர் அவர்களே.

### குரலற்றோரின் குரலானவர்

எமது மக்களின் மனித உரிமைகள் பல்வேறு வடிவங்களில் மீறப்பட்ட சந்தர்ப்பங் களில் அதற்கு எதிராகக் குரல் கொடுத்த குரலோன். மனித உரிமை ஆணைக்குழு வின் இயக்குநராக இருந்து சேவைகள் பல புரிந்த செம்மல். இவர் இப்பதவியை வகித்த போது "உரிமைநோக்கு" என்ற சஞ்சிகையை வெளியிட்டார். மக்கள் அனுபவிக்க வேண் டிய உரிமைகள் தொடர்பான பல விளக்கங் களைக் கொண்டு அம்மலர் வெளிவந்தது. மனித உரிமைகள் தொடர்பான விளக்கங் களை அதன்மூலம் மக்கள் பெற வாய்ப் பேற்பட்டது.

### நிறைவாக

அருட்பணி A.I. பேணாட் எமது கல்லூ ரியின் அதிபராக இருந்த காலம்(1992-2002) ஒரு பொற்காலம் எனக் கூறுவதில் தவறில்லை. நாட்டில் போர் நடைபெற்ற காலம் இடப்பெயர்வுகள் நிகழ்ந்த காலம். எனினும் கல்லூரி வாழ்க்கை மகிழ்ச்சி யான ஒன்றாகக் காணப்பட்டது. பணப் பற்றாக்குறைதான். ஆனால் மனித குணங் களில் பற்றாக்குறை நிலவில்லை. அனை வரும் ஒரே குடும்பமாகக் குதூகலித்த அந்த நாட்கள் அழகானவை.

அருட்பணி A.I. பேணாட் அடிகளாரின் 25 ஆவது குருத்துவ வெள்ளி விழாவை எமது கல்லூரியில் பல வருடங்களுக்கு முன் 19.10.1995 இல் மகிழ்ந்து கொண்டாடி னோம். அவரது 50 ஆவது குருத்துவ பொன் விழாவை கடந்த 19.10. 2020 இல் நினைவு கூர்ந்தோம். எமக்கண் மையில் அவர் இல்லாத போதும் மனப்பூர்வமாக அந்த நாளை நினைவு கூர்ந்து அவருக்காக இறைவனிடம் வேண்டி னோம். உலகெங்கும் பரந்துவாழும் அவரின் மாணவச் செல்வங் கள், அவரோடு பணி புரிந்த நல்ல உள்ளங் கள், அவரை நேசித்த உறவுகள், உணர்வு பூர்வமாக அன்றைய நாளில் அவரை விசேட விதமாக நினைவு கூர்ந்து மகிழ்வெய்தி னோம். புனித பத்திரி சியார்கல்லூரியின்பாரம் பரியத்தில் அருட்பணி A.I. பேணாட் அடிகளார் ஒரு வரலாறு. பல வடிவங்களில் செயற்பட்ட ஆழுமை படைத்த ஒரு துறவி கல்லூரித்தாயின் உயர்வுக்காய் உழைத்த உத்தமகுரு. இந்நன் நாளில் அவரை வாழ்த்துகிறோம். தொடர்ந்தும் அவரது நல்வாழ்வுக்காக இறைவனிடம் வேண்டுவோம்.

---

## விண்ணகப் பிறப்பின் 8ம் வருடம்

பிறப்பு 12 . 10 . 1979

இறப்பு 14 . 11 . 2012



குருத்துவம் 18.05.2011

அமரர்

**அருட்பணி கீதபொன்கலன் லக்ஸ்மன்**

"இறந்தோரைத் தந்தை எழுப்பி அவர்களை வாழ வைப்பது போல மகனும் தாம் விரும்பியவர்களை வாழ வைக்கிறார்"

[யோவான் 5.21]

பிரிவால் துயருறும்
பெற்றோர்
சகோதரர்கள்

AD71

---

## விண்ணக வாழ்வில் 1ம் ஆண்டு நினைவலைகளுடன்

மலர்வு 17 . 07 . 2010

உதிர்வு 19 . 11 . 2019



அமரர்

**செல்வி சி.பென்சித் றஜாந்தி**

(மாணவி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

ஆண்டொன்று ஓடினாலும் ஆறாது எம் துயரம்
ஆதவனாம் இயேசுவினால் ஒளிரும்
நிலவானாய் என்றும் நீ.

உன் ஆத்மா இறைவனில் மகிழ்ந்திருக்க
புனிதர்களோடு புனிதையாய் நீங்கா
பேரின்பத்தில் – என்றும் திளைத்திருக்க
இறைவனிடம் வேண்டுகின்றோம்.

100, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தங்கை
மற்றும்
உறவுகள்.

AD/74

---

## விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவு

மண்ணில் 30 . 06 . 1941

விண்ணில் 17 . 10 . 2020



அமரர்

**செல்வநாயகம் அன்ரன் செல்வராஜா**

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

"உயிர்த்தெழச் செய்பவரும், வாழ்வு தருபவரும் நாமே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"

(யோவான் 11:25)

"ஆவே மரியா"
சில்லாலை.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, மகள்,
சகோதரர்கள்.

AD/75

---

## விண்ணக வாழ்வில் 1ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 . 02 . 1952

மறைவு 28 . 11 . 2019



அமரர்

**பாக்கியநாதர் றெஜிஸ்செல்வநாதன்**

"சீரியதொரு பந்தயத்தில் ஓடினேன்
ஓட்டத்தை முடித்து விட்டேன்"

எங்கள் அன்புத் தெய்வமே ஆறாத்துயர் தந்து
மீளாத்துயில் கொண்ட
உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

235, கடற்கரைத்தெரு,
நீர்கொழும்பு.
031 222 5327
0779929511

இவரின் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மகன்,
மருமகள், உற்றார், உறவினர்

AD/78

---

## 6ம் ஆண்டு நினைவஞ்சலி

தாய் மடியில் 01 . 08 . 1946

இறையடியில் 09 . 11 . 2014



அமரர்

**யோசவ் பிரான்சிஸ் சேவியர்**

என்னில் நம்பிக்கை கொள்வோர் இறப்பினும் வாழ்வார்
(யோ.11.25)

கண்மூடித்திறப்பதற்குள் ஆறாண்டுகள் ஆகினவோ!
ஆறவில்லை மனது.
உங்கள் அன்பு முகம் காணக் கனிவும் கம்பீரமும்
நிறைந்த குரல் கேட்க, ஏங்கி
கூடி வாழ்ந்த அந்நாட்கள் இனி வராதா எனத் தவிக்கின்றோம்.
அப்பா! இறையடியில் அமைதி காணச் செபிக்கின்றோம்.
எங்களுக்காய் இறையாசீர் வேண்டிடுவீர்.

27/18, புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்

இன்றும் கண்ணீருடன்
குடும்பத்தவர்

AD 68

---

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 11 . 10 . 1952

விண்ணில் 26 . 10 . 2010



அமரர்

**பிரகாசம் அன்ரனி**

(அன்ரனி மாஸ்ரர்)

"என்னிடம் நம்பிக்கை கொள்பவர்
இறப்பினும் வாழ்வார்"

[யோவான் 11.25]

பத்தாண்டு ஆனாலும் – உம்
பாசம் எமை விட்டகலாது
என்றும் உம் நினைவுகளில்
ஏங்கி நிற்கும் உறவுகள்

19/5 அன்னசத்திர லேன்,
நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

உன் அன்புத் தங்கை
கில்டா - ஜெகதீசர்
குடும்பத்தினர்

AD/69

---

## விண்ணக வாழ்வின் ஐந்தாம் ஆண்டு



அடைக்கல அன்னை அன்பில்
அசையாத நம்பிக்கை கொண்ட
அன்னையே
ஆண்டுகள் ஐந்து ஆனதே
ஆண்டவன் சந்நிதியில்
சங்கமமாகி
உம் உறவுகள்
உமக்காய்உருகி நிற்க
உன்னத பயணம் சென்றாயோ
உலகில் வாழும்
உம் உறவுகள்
நலமுடன் வாழ
இறைவனை
வேண்டிடுவாய்

அமரர்

**திருமதி மெற்றில்டா சோதிமலர் இராஜசிங்கம்**

பிறப்பு 18.09.1948

இறப்பு 18.11.2015

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 18.11.2020 புதன் கிழமை புனித மரியன்னை பேராலயம் காலை 5.30 மணிக்கு, புனித அடைக்கல அன்னை ஆலயம் 6.30 மணிக்கு, புனித புவானியார் ஆலயம் காலை 6.30 மணிக்கு, அருள் ஆச்சிரமம் காலை 6.00 மணிக்கு, புனித நிக்கிலார் ஆலயம் மிருசுவில் காலை 7.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியில் பங்குபற்றி அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

AD 70

# சக்கோட்டையில் இளையோர் மரம் நடுகை



சக்கோட்டைக் பங்கு இளையோர் மன்றத்தினரின் ஏற்பாட்டில் "இளையோர் நாம் இயற்கையை வளப்படுத்துவோம்" எனும் தொனிப்பொருளில் மரம் நாட்டுதல் நிகழ்வு 25.10.2020 ஞாயிற்றுக்கிழமை காலைத் திருப்பலியைத் தொடர்ந்து பங்கில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்பணி. J. பிரான்சிஸ் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 20ற்கும் மேற்பட்ட பயன்தரு மரங்கள் இளையோர் மன்றத்தினரின் ஒழுங்குபடுத்தலில் நாட்டப்பட்டன.

# புலமைப் பரிசில் பரீட்சையில் முன்னிலையிலுள்ள எம் கத்தோலிக்க பாடசாலைகள்

## புனித பத்திரிசியார் கல்லூரி

புனித பத்திரிசியார் கல்லூரியில் இவ்வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் 81 மாணவர்கள் தோற்றியிருந்தனர். அவர்களில் 25 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்றுத் தேர்ச்சியடைந்துள்ளனர். பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் 30% த்தினர் 160க்கு மேற்பட்ட புள்ளிகளையும், 100% மாணவர்கள் 70க்கு மேற்பட்ட புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

## யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் தேசியப் பாடசாலை

யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் தேசியப் பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவிகளின் எண்ணிக்கை 127 ஆகும். வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளி களைப்பெற்று பரீட்சையில் தேர்ச்சிபெற்ற மாணவிகளின் எண்ணிக்கை 16 ஆகும். 118 மாணவிகள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றனர். இத் தேசிய பாடசாலையின் மாணவிகளின் சித்தி வீதம் 93 என பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி அமிர்தா பாதுகாவலனுக்குத் தெரிவித்தார்.

## புனித யோண் பொஸ்கோ வித்தியாலயம்

புனித யோண் பொஸ்கோ வித்தியாலயத்திலிருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 228 ஆகும். வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப்பெற்று பரீட்சையில் தேர்ச்சிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 159 ஆகும். 100 வீதமான மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றனர்.இவ் வித்தியாலயத்தின் மாணவர்களின் சித்தி வீதம் 100 ஆகும்.

## புனித பெனடிக்ற் வித்தியாலயம்

புனித பெனடிக்ற் வித்தியாலயத்திலிருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 75 ஆகும். வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப்பெற்று பரீட்சையில் தேர்ச்சிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 31 ஆகும். 99 வீதமான மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றனர்.இவ் வித்தியாலயத்தின் மாணவர்களின் சித்தி வீதம் 99 ஆகும்.

## மு/புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்



மு/புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 41 ஆகும். வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று பரீட்சையில் தேர்ச்சிபெற்று 10 மாணவர்கள் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர் . 95% மாணவர்கள் 70க்கு மேற்பட்ட புள்ளிகளையும் பெற்றுள்ளனர். இவ் வித்தியாலயத்தின் மாணவர்களின் சித்தி வீதம் 95 ஆகும்.

சித்தியடைந்த மாணவ மாணவிகளையும், அவர்களைத் தயார்படுத்திய பெற்றோர் ஆசிரியர்கள் அதிபர்களையும் பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றோம்.

# இணைய வழியில் மறைமாவட்டக் குருக்களின் வருடாந்தத் தியானம்



தற்போதைய தனித்திருத்தல், சமூக இடைவெளி பேணுதல் போன்ற சூழ்நிலை காரணமாக யாழ். மறைமாவட்டக் குருக்களின் வருடாந்தத் தியானம் இம்முறை இணைய வழியில் (Online) நடைபெற்றது. யாழ் மறைமாவட்டத்தின் 110 குருக்கள் தத்தம் பணித்தளங்களில் இருந்தவாறே பங்கு கொண்ட இத்தியானம் நவம்பர் 9ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 13ம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெற்றது.

இத்தியானத்திற்கான அருள் உரைகளை பிரான்சிஸ்கன் சபைத் துறவியாகிய அருட்திரு. மத்தியு புரேயிடம் அவர்கள் மிகவும் சிறப்பாக வழங்கிக் குருக்களை ஆன்மீக முதிர்ச்சியை நோக்கி வழிநடத்தினார். யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் வழிநடத்தலிலும் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு P. J. ஜெபரட்ணம் அடிகளின் ஒழுங்குபடுத்தலிலும் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விணைய வழித் தியான நிகழ்வுகள் யாழ்.மறைமாவட்டக் கத்தோலிக்க ஊடகத்தின் இயக்குநர் அருட்திரு A. அன்ரன் ஸ்ரீபன் அடிகளின் உதவியுடன் "யாழ் மறை அலை" இணையத்தள தொலைக்காட்சி ஊடாக ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

# பத்திரிசியார் கல்லூரியில் இருந்து 30 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு



யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் இருந்து 2019ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 30 மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகியுள்ளனர் என யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்பணி ஏ.பி. திருமகன் அடிகளார் பாதுகாவலன் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார். இவர்களை வழி நடத்திய பெற்றோர் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்பணி ஏ.பி.திருமகன் அடிகளார் ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். பல்கலைக்கழகம் நுழையும் மாணவர்கள் சிறப்புறக்கற்று வாழ்வில் முன்னேற பாதுகாவலன் வாசக நெஞ்சங்களின் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கிறோம்.

# ஆன்மீக சக்தியால் தீமையை வெல்வோம்

## கியூடெக் கரித்தாஸ் இயக்குநர்



கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் சர்வமத சகவாழ்வு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தீபாவளிக் கொண்டாட்ட நிகழ்வொன்று இயக்குநர் அருட்பணி S. இயூஜின் பிரான்சிஸ் அடிகளின் தலைமையில் நடைபெற்றது. சர்வமதத் தலைவர்களும் கியூடெக் உத்தியோகத்தர்களும் சுகாதார விதிமுறையைப் பேணும் வகையில் ஒன்றிணைந்து 16.11.2020 திங்கட்கிழமை அன்று சிறப்பித்தனர்.

இந் நிகழ்வில் இயக்குநர் அருட்பணி S. இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் தனது தலைமையுரையில் "எமது கலாசார பண்பாடுகள் ஆன்மீக விழுமியங்கள் கொண்டாடப்பட வேண்டும். தீயவர் அழிந்த நாளைத் தீபாவளியாகக் கொண்டாடும் போது எம்மிடம் இன்று கோரத்தாண்டவம் ஆடும் கொரோனா (Covid 19) அழித்திட ஆன்மீக சக்தியை ஒன்றிணைத்து பிரார்த்திப்பது அவசியம்" என்றார்.

சிறப்புரை ஆற்றிய சிவசிறீ சுபாஸ்கரக் குருக்கள் "சமயங்கள் ஒன்றிணைந்து கொண்டாடுவது இனமத நல்லுறவுக்குப் பலம் சேர்க்கின்றது. தீமைகள் ஒழிந்து நன்மைகள் நடைபெற எமது மக்களின் துயர் கழைய இறைவனை வேண்டுதல் செய்வதன் மூலம் தான் எமது நாட்டில் இன்று இருள்சூழ்ந்து கொடுமைப்படுத்துகின்ற கொரோனா (Covid 19) வைரஸை விரட்ட இருளகற்றும் ஒளியாக மக்கள் நற்சிந்தனையுடன் இவ் விழாக்களைக் கொண்டாடுவது சிறப்பாகும் என்றார்.

மேலும் இந்நிகழ்வில் அருட்பணி எமில் போல் அடிகளார், அருட்தந்தை எறிக் றொசான் அடிகளார், யாழ். நாகவிகாரைத் தேரர் வண. தர்மதேரர் மற்றும் யாழ். பள்ளிவாசல் வண. மௌலவி.A.M.ரலீம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினர். நிகழ்வின் இறுதியில் சிறுமிகள் தீபநடனத்தை அரங்கேற்றிச் சிறப்பித்தனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2020ம் ஆண்டு நவம்பர் மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.